RE/MAX REALTRON BLUE FORCE · TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 18 பெப்ரவரி 2022 இதழ்:- 43

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# 50 ஆண்டுகளுக்குப் பின்னர் கனடாவில் அவசர நிலை பிரகடனம்



கனடாவில் தடுப்பூசிக்கு எதிரான போராட்டம் வலுத்து வரும் நிலையில் 50 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு செல்லும் லாரி டிரைவர்கள் கட்டாயம் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்பதுடன் அமெரிக்காவில் இருந்து கனடா திரும்பும் லாரி டிரைவர்களும் கட்டாயம் தடுப்பூசி செலுத்த வேண்டும் என கனடா அரசாங்கம் அறிவித்தது.(3ம்பக்கம் பார்க்க)

## மனித உரிமையும் பொறுப்புக்கூறலும் முன்னுரிமைக்குரிய விடயங்கள்!

### ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்கத்தூதர்

# புலிகள் தனிநாட்டைக் கோரவில்லை! கஜேந்திரன் எம்.பி புது விளக்கம்?

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தம் தனி நாட்டுக்கானது அல்ல. தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கானதே என்று கூறியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன். யாழ்ப்பாணத்தில் இருந்து ஒளிபரப்பாகும் டான் தமிழ் ஒளியில் 12 பெப்ரவரி 2022 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஒளி பரப்பான எது சரி எது பிழை நிகழ்ச்சியில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.(7ம் பக்கம் பார்க்க)



# இந்தியாவுடனான இலங்கை நெருக்கமான உறவுக்கான அணுகுமுறைகள் 13ஐ முற்றாக நீக்குவதற்கான உத்தியா?

இலங்கைக்கான புதிய அரசியல் அமைப்பு வரைபு நிறைவடைந்ததாகவும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாகவும் சிங்கள ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. (21ம் பக்கம் பார்க்க)

மின்னஞ்சல் முகவரி:- Eelanadu.ca

## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 416 841 9600

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




**Team SIVA** WILL BRING THE BEST RESULTS!


**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Markham & Brimortan




**Scarborough** **$1,850**
Bedrooms: 2 Washrooms: 2
All Utilities Included

## Derry/Goreway



**Mississauga** **$498,900**
Bedrooms: 2 Washrooms: 1
Great Opportunity First Time Buyers

## Burnamthorpe/Living Arts



**Mississauga** **$499,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Kitchen

## Kennedy / Hwy 401



**Scarborough** **$699,000**
Bedrooms: 2+1 Washrooms: 2
Approx. 790 Sq Ft.

## Yonge & Finch



**Toronto** **$819,900**
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony

## Bleasdale/ Creditview


**Brampton** **$849,000**
Bedrooms: 3 Washrooms: 2
End Unit, Villa Freehold Home

## Park Rd S/Phillip Murray Ave


**Oshawa** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Close To Schools, Shopping

## Rossland And Ravenscroft


**Ajax** **$899,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Huge Open Concept Kitchen

## Mclaughlin/Elgin


**Brampton** **$949,000**
Bedrooms: 3+2 Washrooms: 4
Updated Kitchen, Pot Lights

## Brock & Dellbrook


**Pickering** **$1,299,000**
Bedrooms: 4+2 Washrooms: 4
Family Size Kitchen W/Out To Deck

## Markham/Ellesmere


**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+2 Washrooms: 5
Newly Renovated

## Ellesmere/Conlins



**Scarborough** **$1,299,999**
Bedrooms: 4+1 Washrooms: 4
Basement W/Separate Entrance

## Westney/Rossland



**Ajax** **$1,499,000**
Bedrooms: 4 Washrooms: 5
Over 4600 Sq Ft Of Living Space.

## Bovaird/Torbram


**Brampton** **$1,499,999**
Bedrooms: 3+2 Washrooms: 4
Brand-New Kitchen

## Richmond St W/Peter St



**Toronto** **$2,250**
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout Of 790 Sq Ft

## Sheppard Ave E/ 404



**Toronto** **$2,600**
Bedrooms: 2+1 Washrooms: 2
Good Exposure W/Natural Light

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு**
**மார்சே துர்க்கா**
**(514) 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.




# 50 ஆண்டுகளுக்குப் பின்னர் கனடாவில் அவசர நிலை பிரகடனம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதே போல் அமெரிக்கா சென்று விட்டு திரும்பி வரும் லாரி டிரைவர்கள் தடுப்பூசி செலுத்தவில்லை என்றால் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உள் ளாக்கப்படுவர் என கனடா அரசாங்கம் தெரிவித்ததுடன் கொரோனா தொடர் பான கட்டுப்பாடுகளையும் அதிகரித் தது.

இதனிடையே தடுப்பூசி கட்டாயம் என்ற உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கனடாவில் லாரி டிரைவர்கள் கடந்த சில நாட்களாக போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றனர். அந்த வகையில் போராட்டம் தற்போது தீவிரமடைந்து வரும் நிலையில் போராட்டத்தின் ஒரு பகுதியாக கனடா - அமெ ரிக்காவை இணைக்கும் முக்கிய பாலமான தி அம்பாசிடர் பாலத்தை போராட்டக்காரர்கள் முடக்கினர்.

இதன் காரணமாக லாரிகள் பாலத்தில் நிறுத்தப்பட்டதால் கனடா - அமெரிக்கா இடையேயான போக்கு வரத்து தடைபட்டது. அதன் பின்னர் போலீசார் அப்பகுதிக்கு விரைந்து சென்று தி அம்பாசிடர் பாலத்தில் நிறு த்தப்பட்டிருந்த லாரிகளை அப்புறப்படு த்தனர். இதனால் கனடா - அமெரிக்கா இடையேயான போக்குவரத்து சீரா னது. இந்நிலையில் லாரி டிரைவர் களின் போராட்டம் தொடர்ந்து தீவிர மடைந்து வருவதால் கனடாவில்



அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கனட பிரதமர் ஜஸ்டின் டுருடோ நாட்டில் அவசர நிலையை பிறப்பித் தார். 50 ஆண்டுகளுக்கு பின்னர் கனடாவில் பிறப்பிக்கப்படும் அவசர நிலை இதுவாகும். இதற்கு முன்ன தாக 1980-ம் ஆண்டுவாக்கில் கனடா வில் அவசரநிலை பிரகடனம் செய்யப் பட்டது. தற்போது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் போரா ட்டக்காரர்களை கட்டுப்படுத்த பொலி சாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. மேலும் போராட்டங்களில் ஈடுபடுவர்களின் வங்கி கணக்குகளை முடக்கவும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

அதேவேளை சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட பொலிசாருக்கு கூடுதல் அதி காரம் வழங்கப்பட்டுள்ளது. அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டபோதும் நிலைமையை கட்டுப்படுத்த இது வரை இராணுவம் களமிறக்கப்பட வில்லை. எனினும் அவசர நிலை பிரகடனத்தால் கனடாவில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# ஸ்ரீலங்காவில் மனித உரிமையும் பொறுப்புக்கூறலும் முன்னுரிமைக்குரிய விடயங்கள் - அமெரிக்கத்தூதர்



மனிதஉரிமைகளும் பொறுப்புக்கூறலும் தனது முன்னுரிமைக்குரிய விடயங் களாக காணப்படும் என இலங்கைக் கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜஜீலி சங்தெரிவித்துள்ளார். அமெரி க்காவில் வாழும் இலங்கையர்களு டனான மெய்நிகர் சந்திப்பொன்றின் போது அவர் இதனை தெரிவித்துள் ளார்.

இதன் போது இரு நாடுகளிற்கும் இடையிலான பொருளாதார உறவு களை மேலும் மேம்படுத்த வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள புதிய தூதுவர் தனது பதவிக்கால த்தில் கொழும்பில் இலங்கை அரசாங் கத்துடன் பணியாற்றும் போது மனித உரிமைகள் சமூகங்களிற்கு இடையில் நல்லிணக்கம் மனித உரிமை மீறல் களிற்கு பொறுப்புக் கூறுதல் ஆகிய விடயங்களே தனது முன்னுரிமைக் குரிய விடயங்களாக காணப்படும் என தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளிற்கும் இடையிலான பர ந்து பட்ட கூட்டுறவை உருவாக்கும் விவகாரங்கள் இவை என புதிய தூது வர் தெரிவித்துள்ளார். அமெரிக்கா ஜெனீவாவில் மனித உரிமை பேரவை யில் மீண்டும் இணைந்து கொண்டு ள்ளது என்பதை நினைவுபடுத்தியுள்ள அவர் எதிர்வரும் அமர்வில் இலங்கை நல்லிணக்கம்.பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை விவகாரங்களில் உறுதி யான சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டும் (20ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# சர்வதேசம் எதிர்பார்க்கும் நல்லிணக்கம் இலங்கையில் இல்லை! தென்கொரியாவில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு!



இலங்கையில் சிவில் யுத்தம் நிறைவிற்கு கொண்டு வரப்பட்டு 12 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்றும் அதிகார பகிர்விற்கான நிலையான பொறிமுறை ஒன்று அடையாளப்படவில்லை.

சர்வதேசம் எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கம் நாட்டில் பூரணப்படுத்தப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். பெரும்பான்மையை ஜனாதிபதி கோத்தா பயவுக்கு பெற்றுக் கொடுக்க இணைந்து செயற்படுவதாக மைத்திரி தெரிவித்தார். தென்கொரியாவில் கடந்தவாரம் இடம்பெற்ற சமாதானம் தொடர்பிலான மாநாட்டில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது

சமாதானம் தொடர்பிலான மாநாட்டில் கலந்துக் கொண்டு உரையாற்றுவது இலங்கைக்கு கிடைத்த பெருமை என கருதுகிறேன். இலங்கைக்கும் தென் கொரியாவிற்கும் இடையில் வரலாற்று காலம் தொடக்கம் பொருளாதாரம், முதலீடு, தொழிற்துறை உள்ளிட்ட பல்துறையில் காணப்படும் நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்பு சமாதானத்தையும் ஐக்கியத்தையும் கேள்விக்குள்ளாக்கும் தென்கொரியாவிலும் இவ்வாறான தன்மை ஆரம்ப காலத்தில் காணப்பட்டது.

தற்போது அந்நிலைமை மாற்றம் பெற்றுள்ளமை வரவேற்கத்தக்கது. தேசிய நல்லிணக்கம் பொருளாதார முன்னேற்றத்தின் பிரதான அம்சமாக காணப்படுகிறது.

இலங்கை வரலாற்றில் இலங்கையர்கள் பரம்பரை அலகுகளாக ஐக்கியத்துடன் ஒன்றினைந்திருந்தார்கள். இலங்கையர்கள் மத்தியில் கலை கலாசாரம் மதம் மற்றும் பாரம்பரிய சம்பிரதாயங்கள் உள்ளிட்ட துறைகளில் நல்லிணக்கம் காணப்படடதால் இலங்கை "சிலோன்"என அடையாளப்படுத்தப்பட்டது. பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுதலை பெற இலங்கையர்கள் அனைவரும் ஒன்றினைந்து போராடினார்கள்.

இருப்பினும் தேசிய மற்றும் வெளிநாட்டு அழுத்தங்களினால் பொறாமை எதிர்ப்பு இனங்களுக்கிடையில் பிளவுகள் தோற்றம் பெற்று அது அரசியல் பிரச்சினையாக்கப் பட்டது.

அதனை தொடர்ந்து அரசிற்கு எதிரான போராட்டங்கள் தலைதூக்கின .65,000 கிலோமீற்றர் சதுர பரப்பரளை கொண்ட இலங்கை தீவினை எல்லை அடிப்படையில் பிளவுப்படுத்த தீவிரவாத தரப்பினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர்.

நாட்டுக்குள் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வு காண அரசு பல்வேறுக்கட்ட பேச்சு வார்த்தையினை முன்னெடுத்தது. நோர்வே அரசாங்கத்தின் தலையீட்டில் இலங்கையில் 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கொண்டு வரப் பட்டது.

இலங்கையில் காணப்பட்ட தீவிரவாதத்தை சமாதான முறைமையின கீழ் நிறைவிற்கு கொண்டு வர முன்னெடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் இறுதியில் தோல்வியடைந்தன.

யுத்த மார்க்கத்தில் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர வேண்டியிருந்தது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து அமைதி சமாதானம் நல்லிணக்கம் ஜனநாயகம் ஆகியவற்றை இலங்கையில் உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் எட்டாவது பொதுச்செயலாளர் பான்கி மூன் முன்னேற்றகரமான தீர்மானங்களை முன்னெடுத்தார். முரண்பாடுகளுக்கு யுத்தம் தீர்வாக அமையாது. இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பப்பட்டது.

இலங்கையில் சிவில் யுத்தம் 2009ஆம் ஆண்டு நிறைவிற்கு கொண்டு வரப்பட்டது. 12 வருடம் கடந்துள்ள நிலையில் இன்றும் நிலையான அதிகார பகிர்விற்கான பொறிமுறை வகுக்கப்படவில்லை. சர்வதேசத்தின் மதிப்பீட்டிற்கமைய தேசிய நல்லிணக்கம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்றார்.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழத்து - தமிழகக் கலைஞர்களோடு
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
07 ஆகஸ்ட் 2022
தொடர்புகளுக்கு
416 841 9600



## மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ரொறன்ரோ, கனடா வழங்கும்

## மகாஜனன் இளைஞர் தமிழ், கணித, பொது அறிவுப் போட்டிகள் - 2022

**காலம்:** February 27th 2022, 8.30 AM Sunday

**பிரிவுகள்:** தரம் ஆரம்பம் முதல் தரம் 12 வரை (From Grade SK to Grade 12)

**இடம்:** Toronto & Montreal

| ThamiZh Isai Kalaamantram<br>1120 Tapscott Rd.<br>Scarborough ON M1X 1E8<br>(Tapscott & McNicolle) | Murugan Temple, Montreal<br>1611 St Regis Blvd,<br>Dollard-Des Ormeaux,<br>Quebec, H9V 3H7 |
|---|---|
| **குறிப்பு:** 1. தமிழ் மொழிப் போட்டிகள் பிரிவு தரம் 3 முதல் தரம் 8 வரை மட்டும் இடம்பெறும்.<br>2. கணித, பொது அறிவுப் போட்டிகள் தரம் ஆரம்பம் முதல் தரம் 12 வரை இடம்பெறும்.<br>3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.<br>4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு 25 டொலர்கள் அறவிடப்படும். ஒரு குடும்பத்தில் 3 பிள்ளைகள்பங்குபற்றினால் 60 டொலர்கள் அறவிடப்படும். | **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**<br>Pl. Find below is our contest link for the contest registration page.<br>https://tinyurl.com/2p8esc9k<br>**மேலதிக தொடர்புகளுக்கு:**<br>Toronto : (226)750 5811, 416 451 8427, 416 918 5136, 416 726 0822<br>Montreal : 514 513 7940, 514 826 6218<br>**விண்ணப்ப முடிவு திகதி:** 23.02.2022 |

# தமிழரின் கூட்டு ஆவணத்துக்கான பதிலை மோடி அரசு செயலில் காட்டும் - சம்பந்தர்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாம் அனுப்பிய கூட்டு ஆவணத்துக்கான எழுத்துமூல பதிலை மோடியிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அதற்கான பதிலை மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்குச் செயலில் காட்டும் என்று நாம் நம்புகின்றோம் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் பேசும் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து தயாரித்த கூட்டு ஆவணம் அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்பட்டது. இந்த ஆவணத்துக்கான பதில் மோடி தரப்பிடமிருந்து வந்ததா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பொது நிலைப்பாட்டை அந்தக் கூட்டு ஆவணத்தில் நாம் பிரதிபலித்துள்ளோம். அது காத்திரமான ஆவணம். இந்தியப் பிரதமருக்கு நாம் அனுப்பிய அந்தக் கூட்டு ஆவணத்துக்கான எழுத்து மூல பதிலை நாம் எதிர்பார்க்கவில்லை. எனினும், அதற்கான பதிலை மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்குச் செயலில் காட்டும் என்று நாம் நம்புகின்றோம்.

எமக்கான எழுத்துமூல பதிலை எதிர்பார்த்து அந்தக் கூட்டு ஆவணத்தை நாம் அனுப்பவில்லை. தமிழ் பேசும் மக்களின் விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசு ஆழ்ந்த கரிசனை எடுத்து இலங்கை அரசுக்கு சில விடயங்களைச் செயலில் புரியவைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே அந்த ஆவணத்தை நாம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளோம் என்றார்.

# வெள்ளை வானில் சென்று ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்

இலங்கையின் மிகவும் பிரபலமான தொலைக்காட்சி ஊடகவியலாளரின் வீட்டிற்குள் ஆயுதமேந்திய நபர்கள் அத்துமீறி நுழைந்து தாக்குதலை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ள அதேவேளை இந்த சம்பவத்திற்கு உள்ளூர் ஊடக அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

அதிகாரம் மிக்க ராஜபக்ச குடும்பத்தையும் அவர்களது சகாக்களையும் கடுமையாக விமர்சிக்கும் விதத்தில் தனது சமீபத்தைய ஒளிபரப்புகளை வெளியிட்டிருந்த (யூ டியுப்பில்) சமுடித சமரவிக்கிரம அதிர்ச்சியடைந்தவராக காணப்படுகின்றார்.ஆனால் விடியலிற்கு முன்னர் இடம்பெற்ற இந்த தாக்குதலில் அவருக்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் வீட்டின் பாதுகாப்பு கடமையிலிருந்தவரை அச்சுறுத்துவதற்காக ஆயுதங்களை பயன்படுத்தினார்கள் பின்பு பின்னர் வீட்டிற்குள் சென்றார்கள்என காவல்துறை அதிகாரியொருவர் குறிப்பிட்டார். ஆகக் குறைந்தது மூன்றுபேராவது வந்திருக்க வேண்டும்– அவர்கள் வெள்ளை வானில் வந்தார்கள் சமரவிக்கிரம ஏஎவ்பிக்கு தெரிவித்தார்.

நான் துப்பாக்கிசத்தங்களை கேட்டேன், அவர்கள் எனது வீட்டின் ஜன்னல்களை உடைத்துநொருக்கிய பின்னர் மலக்கழிவுகளை எறிந்தனர் அது சிசிடிவியில் பதிவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டார். இந்த தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பது எனக்கு தெரியாது ஆனால் என்னை மௌனமாக்க முடியாது என நான் அவர்களிற்கு தெரிவிக்கின்றேன் எனஅவர் தெரிவித்தார்.

சமுடித்தாவுடன் உண்மை என்ற நிகழ்ச்சியில் பொது பிரபலங்கள் வர்த்தக சமூகத்தினர் என அனைவருடனும் மோதும் போக்கில் அமைந்திருக்கும் அவரது நேர்காணல்களை விரும்புபவர்களும் வெறுப்பவர்களும் உள்ளனர். உள்ளூர் ஊடக சுதந்திர அமைப்புகள் இந்த தாக்குதலை கண்டித்துள்ளன.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் பல தசாப்தங்களாக எவ்வாறான ஆபத்தான சூ ழ்நிலையில் பணியாற்றுகின்றனர் என்பதை இந்த தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது. கொல்லப்பட்ட அல்லது தாக்கப்பட்ட பத்திரிகையாளர்களை நாங்கள் நினைவுகூர்ந்து ஒரு வாரத்திற்கு பின்னர் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளது எனவும் சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

2005 முதல் 2015 வரையிலான மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் 15 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் என எல்லைகளற்ற நிருபர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. இறைமை சார்ந்த விவாதம் மற்றும் தனது உயிருக்கு ஆபத்து என பொய் முறைப்பாட்டை அளித்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இரண்டு வாரங்களிற்கு முன்னர் பொலிஸார் ஹிரு நிறுவனத்தையும் சமுடித்தவையும் விசாரணை செய்ய ஆரம்பித்தனர்.

# நாங்கள் மோதிக் கொண்டு இருக்கும் போது.....

எதை வலியுறுத்துவது, எவ்வாறு வலியுறுத்துவது என்னும் விடயங்களில் தமிழ் கட்சிகள் தங்களுக்குள், முட்டி மோதிக் கொண்டிருக்கும் போது மறுபுறம், தற்போதைய ஆட்சியாளர்களோ, ஒரு விடயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். அதாவது, தமிழ் மக்களுக்கென்று பிரத்தியேகமான பிரச்சினை எதுவுமில்லை என்பதை நுட்பமாக வலியுறுத்துவதே அவர்களின் இலக்காக இருக்கின்றது.

அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மீனவர் பிரச்சினை தான், இந்தியாவிற்கும் இலங்கைக்குமான பிரதான பிரச்சினையென்று இந்திய ஊடமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருக்கின்றார். புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரப் போவதாக கூறி வரும் அரசாங்கம் மறுபுறமோ, தமிழர்களுக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லையென்று கூறுவதில் மிகவும் கவனமாக செயற்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிவுற்று 12 வருடங்கள் கடந்து விட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஐநா மனித உரிமை பேரவையில் எட்டு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதில் ஏழு பிரேரணைகள் இலங்கையின் பொறுப்பு கூறலை வலியுறுத்தும் பிரேரணைகளாகும். இவ்வாறானதொரு சூழலிலும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான எந்தவொரு பிரச்சினையும் இல்லையென்று சாதிக்கவே முற்படுகின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சிறிய குழுவினர் 13வது திருத்தச் சட்டத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் போது, 13வது திருத்தச்சட்டத்தை பலப்படுத்துமாறு கூறுபவர்களும் இருக்கின்றனர். அதே வேளை அதனை பலவீனப்படுத்துமாறு கூறுபவர்களும் இருக்கின்றனர் என்று ஜி.எல். பீரிஸ் குறிப்பிடுகின்றார். பட்டு வேட்டிக் கனவோடு இருந்தவர்களுக்கு கட்டியிருந்த கோவணமும் பறிபோன கதைபோன்றே தமிழ் மக்களின் நிலைமை காணப்படுகின்றது.

13வது திருத்தச்சட்ட விவகாரம் என்பது, முற்றிலும் இலங்கையின் உள்விவகாரம் அதில் இந்தியாவோ அல்லது வேறு எந்தவொரு வெளித் தரப்போ தலையீடு செய்ய வேண்டியதில்லை என்பதே தற்போதைய ஆட்சியாளர்களின் உறுதியான நிலைப்பாடாக இருக்கின்றது. இந்த நிலைமைகளை விளங்கிக் கொண்டுதான் இந்திய வெளியுறவுச் செயலர், ஹர்ஸ் வர்தன், ஆகக் குறைந்தது 13வது திருத்தச் சட்டத்திலாவது தமிழ் கட்சிகள் ஒன்றாக நிற்க வேண்டுமென்னும் கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு மேல் தமிழர்கள் சிந்திக்கக் கூடாது சமஸ்டிக் கோரிக்கையை கைவிட வேண்டுமென்று எந்தவொரு தரப்பும் கூறவில்லை. ஆனால் அதை நோக்கி தமிழர்கள் செல்வதற்கான வெளியுலக ஆதரவை பெற முடியாது. வெளியுலக ஆதவில்லாமல் தமிழர்களால் சமஸ்டித் தீர்வை எவ்வாறு அடைய முடியும்? கடந்த 74 வருடங்களாக ஈழத் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியும் சமஸ்டித் தீர்வை சாதிக்க முடியவில்லையே! இந்த நிலைமையை துல்லியமாக புரிந்து கொண்டே ஈழத் தமிழ் தலைமைகள் என்போர் சிந்திக்க வேண்டும்.

கொழும்பு மிகவும் தந்திரமாக செயற்பட முற்படும் போது, அதற்கு சமதையான தந்திரங்களை கையாளுவதற்கான வாய்ப்புக்கள் தமிழர் தரப்புக்களுக்கு முழுமையாக இல்லாவிட்டாலும் கூட, ஆகக் குறைந்த தந்திரங்களையாவது ஈழத் தமிழர் தரப்புக்கள் கைக்கொள்ள வேண்டும். வீதிகளில் நின்று சுலோகங்களை உயர்த்துவது ஆர்ப்பாட்டங்களை நடத்துவது பிரகடனங்களை செய்வது இவற்றின் மூலம் ஒரு போதுமே வெளித் தரப்புக்களை கையாள முடியாது.(20ம் பக்கம் பார்க்க)


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE
Phone : 416-289-9229

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# இலங்கையை சரியான திசையில் நகர்த்தும் விடயத்தில் ஐ.நா. தலைமையகம் சிறந்தமுறையில் செயற்பட வேண்டும் - ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர்!



சிறிசேனவும்– ரணிலும் பொருத்தமான நிலைமாற்றுக்காலநீதி நிகழ்ச்சி நிரலை உருவாக்க முன் வரவில்லை என ஐநாவின் அறிக்கையாளர் தெரிவித்துள்ளார்

பாதிக்கப்பட்டவர்கள் பொறுப்புக்கூறல் குறித்து ஆர்வத்தை கொண்டிருக்கவில்லை பொருளாதார அபிவிருத்தியையே எதிர்பார்க்கின்றனர் என முன்னைய ராஜபக்ச அரசாங்கம் தெரிவித்தது பிழையான விடயம் என்பது நிருபிக்கப்பட்டது. தற்போதும் அந்த கருத்து பிழை பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான கோரிக்கையை தீவிரமாக கருத வேண்டும்

இலங்கையை சரியான திசையில் நகர்த்தும் விடயத்தில் நியுயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகம் மேலும் சிறந்த விதத்தில் செயற்பட வேண்டும் என உண்மை நீதி இழப்பீடு மற்றும் மீள நிகழாமை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரீவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தென்னாபிரிக்காவை சேர்ந்த மனித உரிமைகளிற்கான அமைப்புடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இணையவழி நிகழ்வில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது முன்னைய அரசாங்கத்துடனான எனது அனுபவங்கள் குறித்தும் நான் விசேட அறிக்கையாளராக இருந்தவேளை அரசாங்கங்களுடனான எனது அனுபவம் குறித்தும் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

அரசாங்கங்கள் எப்போதும் ஒற்றை கல்லால் உருவானவையில்லை, சிறந்த எண்ணப் பாங்குகளும் ஆழமான எதிர்ப்புணர்வுகளும் கொண்டவை. முன்னைய அரசாங்கத்துடனான ஈடுபாட்டின் போது நான் அதிகம் எதிர்கொண்ட தடை என்னவென்றால் அவர்கள் ஜனாதிபதியும் பிரதமரும் பொருத்தமான நிலைமாற்றுக்கால நிகழ்சி நிரலை உருவாக்க தயக்கம் கொண்டிருந்தனர்.

அவர்கள் அதனை முழுமையாக ஆதரிக்கவும் இல்லை ,அதற்கு எதிராகவும் செயற்படவில்லை, அதனை அப்படியே நடுவானில் விட்டனர் ஏனையவர்கள் அதனை தாக்ககூடிய இலக்காக மாற்றினார்கள்.

அவர்கள் முன்னைய இலங்கை அரசாங்கங்கள் எதனை செய்ததோ அதனையே முன்னைய அரசாங்கத்தின் பிரதமரும் ஜனாதிபதியும் செய்தனர்– சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகள் மாத்திரம் போதுமானவை என கருதினாாகள். நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான தங்கள் கடப்பாடுகளை நிறைவேற்ற முன்வரவில்லை.

இலங்கையில் இன்று நாங்கள் காண்கின்ற விடயங்கள் இதனை விட மோசமானவை என்பதை தெரிவிப்பதில் கவலையடைகின்றேன்

மார்சில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் இலங்கையின் இராஜதந்திரிகள் உலகின் பல பகுதிகளிற்கு சென்று தனது நாடு சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான அனைத்தையும் செய்வதாக நம்ப வைக்க சமாதானப்படுத்த முயல்கின்றனர் என்ற செய்திகளை பார்க்கின்றோம்,

சர்வதேச தலை யீடு இல்லாவிட்டால் தங்களிடம் உள்ள குறைந்த வளங்களை பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை பூர்த்தி செய்திருக்க முடியும் என தெரிவித்திருப்பதை அறிகின்றோம்.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இதனை காணமுடியவில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். காணாமல் போனவர்களிற்கான அலுவலகம் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றை உருவாக்குவதற்கு சிலர் தயாராகயிருந்தனர்.

புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலகம் முழுமையான நிகழ்ச்சி திட்டமொன்றை கொண்டிருக்கவில்லை, தற்போது அதன் நிகழ்ச்சி நிரலிற்கும் பொறுப்புக்கூறலிற்கும் இடையில் சிறிய தொடர்புமில்லை என தெரிவிக்க விரும்புகின்றேன்.

இலங்கையை சரியான திசையில் நகர்த்தும் விடயத்தில் நியுயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகம் மேலும் சிறந்த விதத்தில் செயற்படலாம்,

இலங்கை நெருக்கடியின் பல்வேறு தருணங்களில் ஐநா தலைமையகத்தின் மௌனம் விளங்கப்படுத்த முடியாததாக காணப்பட்டதுடன் எந்த விதத்திலும் பயனுடையதாக காணப்படவில்லை.

அமைப்பு முறை என்பது ஒரு சமூகத்தை மையமாக கொண்டதாக காணப்படும்போது நீதி மற்றும் பாதுகாப்பினை பெறுவது சாத்தியமில்லை என்பதை பெரும்பான்மை சமூகம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் பொறுப்புக்கூறல் குறித்து ஆர்வத்தை கொண்டிருக்கவில்லை பொருளாதார அபிவிருத்தியையே எதிர்பார்க்கின்றனர் என முன்னைய ராஜபக்ச அரசாங்கம் தெரிவித்தது பிழையான விடயம் என்பது நிருபிக்கப்பட்டது, தற்போதும் அந்த கருத்து பிழை பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான கோரிக்கையை தீவிரமாக கருத வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)

Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# விடுதலைப்புலிகள் தனிநாட்டைக் கோரவில்லை!

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரன் புது விளக்கம்?

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தம் தனி நாட்டுக்கானது அல்ல. தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கானதே என்று கூறியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒளிபரப்பாகும் டான் தமிழ் ஒளியில் 12 பெப்ரவரி 2022 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஒளிபரப்பான எது சரி எது பிழை நிகழ்ச்சியில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்தநிகழ்ச்சியில் ஈ.பி.ஆர்.எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் பங்கேற்றிருந்தார்.

இதன் போது நிகழ்வில் பங்கேற்ற ஒருவர் 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதற்கே புதிய அரசியல் சாசனம் வருகின்றது. அதை எதிர்ப்பது தவறானது என்ற கருத்தில் கேள்வியை எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விக்கு சுரேஷ் பிறேமச்சந்திரன் பதிலளித்த போது 2009 வரை தனி நாட்டுக்கான யுத்தம் ஒன்று நடக்கிறது. தனி நாட்டுக்கான யுத்தம் நடக்கும் போது எல்லோருக்கும் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது என்று கூறிக் கொண்டிருந்த போது குறுக்கிட்ட கஜேந்திரன் எம். பி. தனிநாட்டுக்கான யுத்தம் அல்ல தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான யுத்தம் என்றார்.

அத்துடன் இவர்கள் (சுரேஷ்) அரசாங்கம் புலிகளை அழித்ததை சரியென்று சொல்லப் பார்க்கிறார் என்றும் கூறினார். ஆனால் இதை மறுத்த சுரேஷ் பிறேமச்சந்திரன் தமிழ்த் தேசத்துக்கானது அல்ல தனிநாட்டுக்கான யுத்தம். தமிழீழத்துக்கான யுத்தமே அது என்றார்.

மீண்டும் மறுத்த கஜேந்திரன் போராட்டத்தை பிழையாக காட்டக் கூடாது. தேச அங்கீகாரத்துக்கான போராட்டமே அது. பேச்சு மேசையில் எந்த ஓரிடத்திலும் தனியரசு குறித்துப் பேசவில்லை என்றார்.

இதன் போது சுரேஷ் பிறேமச்சந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகுட வாசகமான புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்பதைக் குறிப்பிட்டு தமிழீழத்துக்கான போராட்டமே அது. தனி நாட்டை எதற்காகவும் புலிகள் விட்டுக் கொடுக்கவில்லை. பிரபாகரனும் எதற்காகவும் விட்டுக்கொடுக்க வில்லை. இறுதி வரை அதனை விட்டுக் கொடுக்கவில்லை.

34 வருடப் போராட்டம் என்ற போது எல்லோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. தனி நாட்டை அடையாவிட்டாலும் அதிஉச்சப் பகிர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருந்ததுஎன்று கூறினார்.

மேலும் கஜேந்திரன் பின்வருமாறு கூறுகின்றார். தனி நாட்டுக்கு போராடினார்கள் என்று முடிக்கப் பார்க்கிறார். (சுரேஷ்) இதன் மூலம் அரசாங்கம் அவர்களை அழித்தது சரியென்று சொல்லப் பாரக்கிறார். விடுதலைப் புலிகள் பேச்சு மேசையில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தீர்வை முன் வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்று உலகம் முழுவதும் போய் வந்தார்கள்.

தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான தீர்வையே அவர்கள் எதிர்பார்த்தார்கள். இவர்கள் புலிகள் தனி நாட்டைக் கேட்டு எல்லாப் போராட்டமும் நடந்தது. ஆனால் எதுவும் நடக்கவில்லை என்று ஏன் கூற வருகிறார். இனித் தருவதை ஏற்றுக் கொள்வோம் என்று 13ஐ ஏற்றுக் கொள்வோம் என்கிறார்கள். புதிய அரசமைப்பு வரும்போது தான் தீர்வை ஏற்றுக் கொள்ள முடியும். கேட்க வேண்டியதை அப்போது தான் கேட்கமுடியும் என்றார்.

இதே கஜேந்திரன் தான் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் மீனவர் பிரச்சனை தொடர்பாக ஒத்தி வைப்பு பிரேரணை மீது விவாதம் நடத்த அனுமதி இருந்த



போதும் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரின் வேண்டுகோளுக்காக அதனைக் கைவிட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார். நாடாளுமன்ற விவாதங்கள் என்பது உறுப்பினர்களின் சிறப்புரிமை (Special Privilege) என்பது வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு நன்கு தெரியும். அப்படியிருக்க எவ்வாறு இந்தியத் தூரகம் கஜேந்திரனைத் தடுத்தது என்ற கேள்வியும் எழுகின்றது.

# கோத்தா அரசு மனிதஉரிமை செயற்பாட்டாளர் அம்பிகா சற்குணநாதனை அச்சுறுத்துவதற்கும் துன்புறுத்துவதற்கும் முயல்கின்றது!

## 8 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாகக் குற்றச்சாட்டு!

இலங்கையின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் அம்பிகா சற்குணநாதனிற்கு ஆதரவாக எட்டு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் உபகுழுவிற்கு அம்பிகா சற்குணநாதன் தெரிவித்த கருத்துக்கள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள நிலையிலேயே மனித உரிமை அமைப்புகள் அம்பிகா சற்குணநாதனிற்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளன.

இலங்கை அரசாங்கம் அம்பிகா சற்குணநாதன் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையை துன்புறுத்தல் அச்சுறுத்தல் என கருதலாம் என சர்வதேச மன்னிப்புச்சபை சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் உட்பட எட்டு அமைப்புகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்தின் அறிக்கையானது துன்புறுத்தும் அச்சுறுத்தும் ஒன்று என்பது தெளிவான விடயம், மனித உரிமை பாதுகாவலர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையை நாங்கள் கண்டிக்கின்றோம், நன்கு அறியப்பட்ட மதிக்கப்படுகின்ற துணிச்சலான மனித உரிமை ஆர்வலர் அம்பிகா சற்குணநாதனிற்கு எங்கள் முழுமையான ஆதரவை நாங்கள் தெரிவிக்கின்றோம் என மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்து ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்கு துல்லியமான அறிக்கையை சமர்ப்பித்தமைக்காக அவரை இலக்கு வைப்பது ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் எனவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மேலும் இது இலங்கையின் சிவில் சமூகத்திற்கு அச்சத்தை ஏற்படுத்துகின்ற செய்தியை தெரிவிக்கின்றது குறிப்பாக தற்போதைய அரசாங்கத்தின் கீழ் ஏற்கனவே கடும் அழுத்தங்களிற்கு மத்தியில் செயற்படும் வடக்கு கிழக்கை சேர்ந்த சிவில் சமூகத்திற்கு என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.



ஐரோப்பிய ஒன்றியம் உட்பட இலங்கையின் சர்வதேச சகாக்கள் அரசாங்கத்தின் அறிக்கையை வெளிப்படையாக கண்டிக்க வேண்டும், சற்குணநாதனிற்கு வெளிப்படையாக ஆதரவை தெரிவிக்க வேண்டும், அவர் சர்வதேச சமூகத்துடன் ஈடுபாட்டை காட்டியமைக்காக இலக்கு வைக்கப்பட்டுள்ளார் எனவும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சரின் அறிக்கையில் புகழ்பெற்ற மனித உரிமை வழக்கறிஞரை இழிவுபடுத்தும் முயற்சியாக பல தவறான கூற்றுக்கள் இடம்பெற்றுள்ளன எனவும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அவரது வாக்கு மூலம் சமூகங்களிற்கு மத்தியில் ஒரு காலத்தில் பதற்றத்தை ஏற்படுத்திய விடுதலைப்புலிகளின் பிரச்சாரம் போல காணப்படுகின்றது — அவ்வாறான குற்றச்சாட்டுகளை சமூக ஐக்கியத்தினை அடிப்படையாக கொண்டு நிராகரிக்க வேண்டியுள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பாக நயவஞ்சகமானது ஆபத்தானது என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மனித உரிமை ஆர்வலர்களையும் மனித உரிமைக்காக பரப்புரையில் ஈடுபடுபவர்களையும் பிழையாக பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான நடவடிக்கையை இது வெளிப்படுத்துகின்றது என மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.


LAW OFFICE
of
THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

❑ FAMILY LAW:
- Divorce
- Separation
- Property Division

❑ REAL ESTATE
❑ WILLS and ESTATES
❑ EMPLOYMENT LAW
- ODSP, CPP disability
- Wrongful Dismissal
- Long-term Disability

❑ ADMINISTRATIVE LAW
❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,
❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்
❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்
❑ தொழில்சார் சட்டம்
❑ நிர்வாக சட்டம்
❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த
சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோரி சர்வதேசத்தை நாடுவது காட்டிக் கொடுப்பல்ல - அருட்தந்தை சிறில்!



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதானது, நாட்டை காட்டிக் கொடுக்கும் முயற்சி அல்ல. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்காகவே சர்வதேசத்தின் ஆதரவை பெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

எமது இந்த போராட்டத்திற்கு கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகையும் தனது பூரண ஆதரவை வழங்கவுள்ளதாக கொழும்பு மறை மாவட்ட அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபை எதிர்க்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி செயல்படுவதாக கூறப்படுவதை முழுமையாக மறுப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து பரிசுத்த பாப்பரசருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

இதற்கு பதில் கடிதம் அனுப்பியிருந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை இவ்விடயம் தொடர்பில் தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாக அருட் தந்தை சிறில் காமினி குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்று மூன்று ஆண்டுகள் ஆகப் போகின்றன. இருப்பினும் இதுவரை சூத்திரதாரி யார் என கண்டறியப்படவில்லை. இது தொடர்பில் மேற் கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் குறித்து கத்தோலிக்க திருச்சபை அதிருப்தியில் உள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை கத்தோலிக்க திருச்சபை விரும்புகிறது. இந்த தாக்குதல் சம்பவத்தில் மாபெரும் சூழ்ச்சி நடைபெற்றுள்ளதாக அப்போதைய சட்ட மா அதிபர் தப்புள டி லிவேரா தெரிவித்திருந்தார். தப்புள டி லிவேரா வெளியிட்ட இந்த கருத்து தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களம் அவரிடம் விசாரணை நடத்த வேண்டும்.


உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்துக்கு அரசாங்கம் நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு தவறினால், சர்வதேச நீதிமன்றத்தை நாடுவதற்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபை தயாராகவே உள்ளது. எமது இந்த நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் ஆண்டகை தனது பூரண ஆதரவை வழங்குதாக கூறியிருந்தார். மேலும், இவ்விடயம் குறித்து சர்வதேச சமூகத்துக்கும் வெளிநாட்டில் வாழும் இலங்கை கத்தோலிக்கர்களுக்கும் விளக்கமளிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சர்வேதசத்தின் ஆதரவைப் பெறுவதென்பது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் முயற்சியாக கருதாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கருதவும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். யார் ஆட்சியில் இருந்தாலும் நீதிக்காக தொடர்ந்து போராடுவோம்' என்றார்.

இதேவேளை கடந்த மாதம் பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலய வளாகத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவத்தில் கைதான வைத்தியரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் ராஜீந்திர ஜயசூ ரிய இந்த உத்தரவை 14 பெப் 2022 பிறப் பித்தார். முன்னதாக இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தேவாலய ஊழியரை நீதிமன்றம் விடுவித்தது.

கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலய வளாகத்தில் கைக்குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து தேவாலய ஊழியர் மற்றும் பிலியந்தலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வைத்தியர் உட்பட பலர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

27 பெப்ரவரி 2022
ஞாயிற்றுக்கிழமை பிரதோஷ விரதம்

28 பெப்ரவரி 2022 திங்கட்கிழமை
மகாசிவராத்திரி விரதம்

முதல் ஜாமம்
6.00 மணிக்கு
உபயம்:- லிங்கராஜா மீரா குடும்பம்

இரண்டாம் ஜாமம்
9.00 மணிக்கு
உபயம்:- அருள் சுபா குடும்பம்

மூன்றாம் ஜாமம்
நள்ளிரவு 12.00 மணிக்கு
உபயம்:- கிருபா மதுரா குடும்பம்

நான்காம் ஜாமம்
அதிகாலை 3.00 மணிக்கு
உபயம்:- இளையபெருமாள் குடும்பம்

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை
மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# தமிழ்த்தேசிய முன்னணியிடம் பகிரங்கக் கேள்வி!

நாடாளுமன்ற நடைமுறை விதிமுறைகள் (Practical Terms) மற்றும் அங்கு நடைபெறவுள்ள அல்லது நடைபெற்ற விவாதங்களின் முக்கியமற்ற தன்மை அல்லது பிரதானப்படுத்தக் கூடிய விவாதங்கள் (u;ighlighted Debates) எது என்பதை நாடாளுமன்றச் செய்தியாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

ஏனெனில் நாடாளுமன்ற விவாதங்களில் பேசும் அல்லது பிரேரணை சபை ஒத்தி வைப்பு வேளைப் பிரேரணை ஆகியவற்றை சமர்ப்பித்து விவாதங்களை நடத்தும் தமிழ்ப் பிரதிநிதிகள் இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றம் (Sri Lankan Unitary state parliament) என்பதை ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை மற்றும் போரினால் உருவான பக்க விளைவுகளுக்குரிய அத்தனை தீர்வுகளையும் பேசிப் பெற்று விடலாமென்ற தோற்றப் பாட்டைக் காண்பிக்கின்றனர்.

நகல் சட்ட மூலம் திருத்தச் சட்டமூல விவாதங்களில் தமிழ் உறுப்பினர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் அல்லது திருத்தங்கள் பெரியளவில் ஏற்கப்படுவதுமில்லை. அரசதரப்பில் இருந்து பொறுப்புக் கூறுவதுமில்லை. (No accountability) ஆகவே நாடாளுமன்றச் செய்தியாளர்களுக்கு ஒற்றையாட்சி நாடாளுமன்ற விதிமுறைகள் மரபுகள்இ அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும்.

குறிப்பாகப் பிரேரணைகள் மீதான விவாதங்கள்இ நகல் சட்டமூலங்கள் திருத்தச் சட்டமூலங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் குறித்த விவாதங்களின் தன்மைகள் (Nature of Debates) விவாதங்களின் இயற்பியல்கள் (Physio gnomies of Debates) பற்றி முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். (சபை நடவடிக்கைகள் பற்றிய அறிவு உட்பட — Parliamentary routine proceedings) சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை என்பது சபையின் அன்றைய அமர்வு ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் ஆகக் குறைந்தது அரை மணி நேரம் இடம் பெறும் விவாதமாகும்.

எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தனது பிரதேசத்தில் உள்ள பிரச்சனைகள் குறித்து சபாநாயகருக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்துப் பின்னர் விவாதிக்க முடியும். சபை நிகழ்ச்சி நிரலில் இல்லாவிட்டாலும் அவசியம் ஏற்படின் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை சமர்ப்பித்து விவாதிக்கலாம். அதாவது பிரதேசம் ஒன்றின் பிரச்சனைகளை அல்லது குறித்த விவகாரம் ஒன்றை பகிரங்கப்படுத்துவதே இந்த விவாதத்தின் பிரதான நோக்கமே தவிர வேறெதுவுமில்லை.

ஆனால் அரசியலோடு இணைந்த பிரச்சனைகள் தொடர்பாக முழுமையான பிரேரணை சமர்ப்பித்து விவாதம் நடத்த வேண்டுமானால் சபாநாயகா் தலைமையில் இடம் பெறும் நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் பெறப்பட வேண்டும். ஆனால் தமிழர் முஸ்லிம்கள் சார்ந்த அரசியல் பிரச்சனைகள் என்றால் அதற்கு அனுமதி பெறுவது கடினம். (முஸ்லிம்கள் கட்சிகள் அனுதாப அடிப்படையில் அனுமதி பெற்று விடுவார்கள்)

உதாரணமாக வடபகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களால் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாக முழுமையான பிரேரணையைச் சமர்ப்பித்து விவாதிக்க சபாநாயகர் இணங்குவதற்கான வாய்ப்பு இல்லை. அப்படியானால் சபைக்குள் தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டுப் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டும்.

சிங்கள எதிர்க்கட்சிகளின் அனுதாபத்தைப் பெற வேண்டும். ஆகவே அனுதாபம் பாவ புண்ணியங்களின் அடிப்படையில் "சரி விடுங்கள் விவாதிக்கட்டும்" என்று சிங்கள உறுப்பினர்கள் சொன்னால் அந்தப் பிரேரணைக்கு அனுமதி கிடைக்கும். அப்படி இல்லையேல் சபை ஒத்தி வைப்பு



வேளைப் பிரேரணையாகச் சமர்ப்பித்துக் குறித்த விவகாரத்தை விவாதிக்கலாம். சபை நடவடிக்கைகள் தொடர்பாக சபாநாயகர் தலைமையில் இடம்பெறும் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணங்கினால் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்துக்குரிய நேரத்தை அதிகரிக்கலாம். வேண்டுமானால் ஒரு நாள் விவாதமாகவும் நடத்த முடியும். ஆனால் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் (The Standing Orders of Parliament) பிரகாரம் இந்த விவாதத்துக்குரிய நேர ஒதுக்கீடு அரை மணிநேரம் அல்லது ஒரு மணி நேரம் மாத்திரமே.

அத்துடன் இந்த விவாதத்தின் நிறைவில் விவாதிக்கப்பட்ட குறித்த விடயதானம் தொடர்பாக அமைச்சர் பதிலளிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. பிரதியமைச்சர் அல்லது அரசதரப்பு உறுப்பினர் ஒருவர் பதிலளித்தாலே போதும்.

ஆனால் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைக்குப் பதிலளிக்காமல் விட்ட சந்தர்ப்பங்களே அதிகமென நாடாளுமன்றச் செய்தி எழுதும் அனுபவமுள்ளோர் தெரிவிக்கின்றனர். அத்துடன் விவாதம் நடைபெறும் போது ஆசனங்களில் உறுப்பினர்கள் இருப்பதுமில்லை.

அதுவும் தமிழ் உறுப்பினர்களின் சபை ஒத்திவைப்புவேளை விவாதம் என்றால் சிங்கள உறுப்பினர்கள் மாத்திரமல்ல சிங்களச் செய்தியாளர்கள் கூட செய்தியாளர் களரியில் இருக்க மாட்டார்கள் எனவும் அனுபவமுள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர். இப்படிச் சிங்கள உறுப்பினர்கள் சபையில் இல்லாமல் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான பல விவாதங்களை எனது நாடாளுமன்ற செய்திடல் அனுபவத்தில் பார்த்திருக்கிறேன்.

அத்துடன் அந்த விவாதம் அரசாங்கத்திற்குப் பெரும் தாக்கத்தையோ அல்லது எந்தவொரு நாட்டுக்குமான தாக்கத்தையோ ஏற்படுத்தக் கூடியது மல்ல. முழுமையான பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டு அரசதரப்பு எதிர்தரப்பு உறுப்பினர்கள் பலரும் விவாதத்தில் பங்கு பற்றினால் அது குறிப்பிட்டளவு தாக்கத்தைச் செலுத்தும். ஆனாலும் எந்த விவாதங்களாக இருந்தாலும் வெறுமனே நாடாளுமன்ற கன்சாட் அறிக்கையில் பதியப்பட்டு வரலாற்று ஆவணமாக மாத்திரமே இருக்கும்.

விவாதத்தில் பேசப்பட்ட விடயங்கள் செயல்வடிவில் அல்லது நடைமுறைக்கு வருவதென்பது முயற்கொம்பு. அதுவும் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரங்கள் போரின் பக்க விளைவுகளான மீள் குடியேற்றம் காணிப் பறிப்பு மீனவர் பிரச்சனை உள்ளிட்ட பல அடிப்படைப் பிரச்சனைகள் பற்றிய விவாதங்கள் எல்லாமே கன்சாட் அறிக்கையில் மாத்திரமே உண்டு.

தமிழ் நாளேடுகள் வார இதழ்களிலும் செய்திகள் கட்டுரைகளாகவும் உள்ளன. இலங்கை நாடாளுமன்றம் என்பது வெறுமனே ஒரு பேச்சு மேடை தான் என்று அனுபவமுள்ள நாடாளுமன்றச் செய்தியாளர்கள் கூறுகின்றனர். வாக்குப் பெறும் நோக்கில் மக்களைக் கவருவதற்காக மாத்திரமே பரபரப்பாக நாடாளுமன்றத்தில் பேசுகின்றனர் எனவும் அனுபவமுள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

கொழும்பில் இருக்கும் வெளிநாட்டுத் தூதரகங்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்களில் தங்கள் நாடுகளைப் பற்றித் தரக் குறைவாகப் பேசினாலும் கண்டு கொள்வது மில்லை. அதற்குப் பதிலளிப்பது மில்லை. விமல் வீரவன்ச எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த போது கொழும்பில் உள்ள அமெரிக்க இந்தியத் தூதுவர்களைப் புலிகளின் முகவர்கள் என்று கூடப் பேசியிருக்கிறார்.

ஆனால் அது பற்றி எந்தவொரு விளக்கமும் தூதுவர்கள் அரசாங்கத்திடம் பகிரங்கமாகவோ அல்லது தொலைபேசியிலோ கேட்கவேயில்லை. (சில வேளை அது பற்றி மூடிய அறைக்குள் இராஜதந்திரிகள் விளக்கமளித்திருப்பர்) 2006 ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள இந்திய அப்பலோ சர்வதேச மருத்துவ மனையின் கூடுதல் பங்குகளை சர்வதேச நியமங்களுக்கு மாறாகப் பெற்று இலங்கை தனதாக்கியது.

இதனால் கொழும்பில் அப்போதிருந்த இந்தியத் தூதுவர் நிருபன் சென் இலங்கை அரசாங்கத்திடம் விளக்கம் கோரியிருந்தார். பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இந்தியாவுக்கு எதிரான இனவாத மனநிலையைக் கூடத் அமைச்சர்கள் மத்தியில் தோற்றுவித்திருந்தது. அப்போது அமைச்சராக இருந்த அமரர் அனுரா பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் கடுமையாக விவாதித்திருந்தார்.

இந்தியத் தூதுவரை மோசமாகத் தாக்கிப் பேசியியுமிருந்தார். ஆனால் அந்த விவாதத்தை நிறுத்துமாறு அல்லது இந்தியத் தூதுவரை அவதூறாகப் பேசியமை பற்றியோ இந்தியத் தூதரகம் பகிரங்க விளக்கம் கோரியதாக இல்லை. அதுவும் சபை ஒத்துவைப்பு வேளை பிரேரணை ஒன்றை நிறுத்துமளவுக்கு எந்தவொரு வெளிநாட்டுத் தூதரகமும் கீழிறங்கிய சந்தர்ப்பங்களை எனது நாடாளுமன்ற அனுபவத்தில் நான் கண்டதில்லை.

ஏனெனில் நாடாளுமன்ற விவாதங்கள் என்பது உறுப்பினர்களின் சிறப்புரிமை (Special Privilege) என்பது வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவேதான் நாடாளுமன்றச் செய்தியாளர்கள் அல்லது நாடாளுமன்றச் செய்தி எழுதுவோர் முதலில் செய்தி நுட்பங்கள் விதிகள் மரபுகள் ஆகியவற்றைப் புரிதல் அவசியம். 2020 ஆம் ஆண்டு மாவீரர் நாள் அன்று தமிழரசுக் கட்சி நாடாளுமன்றத்தில் தீபம் ஏற்றியதாகப் படத்துடன் நாளிதழ் ஒன்றில் செய்தி வந்தது.

ஆனால் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் உள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்திலேயே தீபம் ஏற்றப்பட்டது. கட்சி அலுவலகத்தில் தீபம் ஏற்றியதால் நாடாளுமன்ற விதிகளை மீறியதாகக் குற்றம் சுமத்திப் பொலிஸார் விசாரணை நடத்தவே முடியாது. ஆகவே நாடாளுமன்றச் சபா மண்டபத்திற்கு முன்பாகத் தீபம் ஏற்றியிருந்தால் மாத்திரமே அது செய்தி.

ஆனால் அங்கு தீபம் ஏற்றுவதற்குச் சபாநாயகர் அனுமதி வழங்க மாட்டார். அப்படி அத்துமீறித் தீபம் ஏற்றியிருந்தால் உடனடியாகவே நாடாளுமன்றப் பொலிஸார் தடுத்திருப்பார்கள் தீபத்தைத் தட்டி விழுத்தியிருப்பார்கள்.

அதனாலே தான் அரசாங்கத்துக்கும் தங்களுக்கும் சிக்கலை ஏற்படுத்தாமல் தங்கள் கட்சி அலுவலகத்துக்குள் தீபம் ஏற்றி விட்டுப் படத்தை ஊடகங்களுக்கு அனுப்பி நாடாளுமன்றத்தில் தீபம் ஏற்றப்பட்டதாகத் தமிழரசுக் கட்சி கதை விட்டிருந்தது. ஆகவே தங்கள் அரசியல் புகழ்ச்சிக்காக அரசியல்வாதிகள் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக வெளியிடும் படங்களையோ அறிக்கைகளையோ உடனடியாகச் செய்தியாக்கவே கூடாது. மாறாக நாடாளுமன்றம் பற்றிச் சரியான புரிதலோடு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

ஏனெனில் சாதாரண மக்கள் நாடாளுமன்ற விதிமுறைகளை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால் ஊடகங்கள் மாத்திரமே பொறுப்புடன் செயற்பட்டு மக்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் புரியும் அரசியல் திருகுதாளங்களை அம்பலப்படுத்த வேண்டும்.

மீனவர் பிரச்சனையைத் தீர்ப்பதாக உறுதியளித்து அது குறித்த சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தடுத்து நிறுத்தியதாக இருந்தால் வடக்குக் கிழக்கு இணைப்புத் தொடர்பான பிரேரணை ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சமர்ப்பிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளதென்ற முடிவுக்கு வரலாம்.

ஏனெனில் 2006ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தினால் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது பிரேரணை ஒன்றின் மூலம் மீண்டும் இணைக்க முடியுமென பிரதம நீதியரசராக இருந்த சரத் என் சில்வா தீர்ப்பில் சுட்டிக் காட்டியிருந்தார். ஆனால் இன்றுவரை தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரேரணை எதனையும் சமர்ப்பித்து வடக்குக் கிழக்கு மாகாணத்தை மீண்டும் இணைக்க ஏற்பாடு செய்யவில்லை.

ஆகவே 2020 தேர்தலில் இரண்டு ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விசேட பிரேரணை ஒன்றைச் சமா்ப்பித்து வடக்குக் கிழக்கை மீண்டும் இணைக்க முற்படலாம். அது இலங்கை நாடாளு

(20ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

12 பெப்ரவரி 2022 முதல் 18 பெப்ரவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:-

ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துஷியந்தி நவநாதன்

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ் விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது முதலாவது ஆன்டு நினைவு நாள் 17 பெப்ரவரி 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினரு டன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி முத்தையா மகாலஷ்மி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முத்தையா மகாலஷ்மி (காந்தி) அவர்களது 3வது ஆண்டு நினைவு நாள் 14 பெப்ரவரி 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி முத்தையா மகாலஷ்மி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 23 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கதிரேசபிள்ளை துரைச்சாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ருக்மணிதேவி முத்தையா

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது 16வது ஆண்டு நினைவுநாள் 12 பெப்ரவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது உற்றார், உறவினர்களோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணவேணி ஶ்ரீதரன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஶ்ரீதரன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 16 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணவேணி ஶ்ரீதரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை அருளானந்தம்

வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கனகசபை அருளானந்தம் அவர்களின் 16வது ஆண்டு நினைவு தினம் 23 பெப்ரவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கனகசபை அருளானந்தம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம்

வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு தினம் 20 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு வேலுப்பிள்ளை இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

மின்னஞ்சல் முகவரி:- Eelanadu.ca

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



12 பெப் 2022 சனிக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த செல்வி ருக்மணிதேவி முத்தையா அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது உறவுகள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 பெப் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சந்திரகுமார் சுமதி தம்பதிகளின் செல்வப்புதல்வி ரஷ்மி சந்திரகுமாரின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி ரஷ்மி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



13 பெப் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரமேஸ்வரன் கௌரி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஆர்த்தி ரமேஸ்வரனின் 18 பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி ஆர்த்தி தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



14 பெப் 2022 திங்கட்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த காந்தி என்ற அன்பாக அழைக்கப்படும் திருமதி முத்தையா மகாலஷ்மி அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 பெப் 2022 ஞாயிற்றுக்கிழமை பூநகரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்களது 13வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 14 பெப் 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



15 பெப் 2022 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சின்னப்பு கோபாலபிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



03 பெப் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலச்சந்திரன் தேவிகாராணி இணையர்களது 40வது திருமண நன்நாளாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 15 பெப் 2022 செவ்வாய்க்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



16 பெப் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஹரிச்சந்திரா சாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஹரிசா ஹரிச்சந்திராவின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி ஹரிசா ஹரிச்சந்திரா தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



16 பெப் 2022 புதன்கிழமை சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 பெப் 2022 வியாழக்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.


17 பெப் 2022 வியாழக்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 பெப் 2022 வியாழக்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம் இசை ஆசிரியர் அமரர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம்

புங்குடுதீவைச் சேர்ந்த சங்கீதபூஷணம், இசை ஆசிரியர் திரு நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 20 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகைவாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759


இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



# Amma Pawn Broker

# அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

## அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861



# TAX CENTRIC

2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph




- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning

## Gayatiri Thavan

Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**





Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
Scarborough, ON M1V 1V2
Mahindan.mailvaganam@rbc.com

Cell: 416-262-4973

## Insurance can seems confusing
## It doesn't have to be.

*We'll help you get it.*

**Talk to an RBC Insurance advisor in your neighbourhood today**

*We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.*

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம்
அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால்
பெரும்பாலும் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®

Life | Health | Auto | Home | Travel | Wealth

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





# OM SIVA SHAKTHI ASTROLOGER CENTER



## Master : KASHI GURUJI

Over 40+ Years of Experience

**Horoscope, Hand & Face Reading, Know your Past, Present & Future**

**கைரேகை, எண்ஜோதிடம், ஜாதகம் விளக்கம், வெத்திலையில் மை போட்டுப் பார்த்தல், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி அறிதல்**



★கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை
★சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு
★திருமணயோகம், காதல் விவகாரங்கள்
★தொழில், மனை அபிவிருத்தி, முன்னேற்றம்
★லட்சுமி கடாட்சம், வாகனம், மனைப் பொருத்தம்
★விசா பிரச்சனைகள், கோர்ட் வழக்கு
★ஆரோக்கியம், செய்வினை கோளாறு
★பேய், பிசாசு, எதிரிகள் தொந்தரவு
★கண் திருஷ்டி, நாக தோசம் போன்ற
சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு உண்டு.
உடனே பண்டித் காசி குருஜியை சந்திக்கவும். All Religions welcome.

★Money Blessings
★Love Problem
★Health Problem
★Relationship Problem
★Husband & Wife Disputes
★Family Arguments
★Depression
★Sexual Problem
★Business Problem

PRIVATE & CONFIDENTIAL

★Peoples's Jealousy
★Enemy Problem &
★Marriage Problem
Get all your problems solved.

Specialist in bringing back loved ones.

**Black Magic Removal in 24hours.**

**Open 7 days**

100% Result Guaranteed. Give life long protection

**Call for Appointment**

# 647-324-9991 | 437-833-7796

Unit 16, 2857 Lawrence Ave East
Scarborough, M1P 2S8

2891 A, Derry Road East
Mississauga, ON, L4T 1A6

# ஈழத்தமிழ் நோக்கி நிலையில் இருந்து இந்தியாவை அணுகுவது

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –





கடந்த ஞாயிற்றுக்கிழமை சக்தி தொலைக்காட்சியின் மின்னல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் நாங்களும் இந்தியாவின் தலையீட்டைக் கோரித்தான் நிற்கிறோம் என்று கூறுகிறார். அவருடைய கட்சி கிட்டு பூங்காவில் ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்திலும் இந்தியா ஒரு நட்பு சக்தி என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தியத் தலையீட்டைக் கேட்பது என்று முடிவெடுத்தால் ஆறு கட்சிகளின் கூட்டு அழைத்த போது அதில் இணைந்து கூட்டுக்கோரிக்கையின் வடிவத்தை மாற்றியிருந்திருக்கலாந்தானே? மேலும் 13க்கு எதிராக அக்கட்சி மக்கள் மத்தியில் தெரிவிக்கும் கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால் அக்கட்சி உண்மையாகவே இந்தியாவின் தலையீட்டை கோரி நிற்கின்றதா? என்ற சந்தேகமே எழுகிறது.

எனினும் கடந்த புதன்கிழமை மீனவர்களின் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அக்கட்சி கொண்டு வர இருந்த ஒத்திவைப்பு பிரேரணையை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் வேண்டுகோளை ஏற்று அக்கட்சி கையாண்ட விதம் பொசிற்றிவ் ஆனது.

13ஆவது திருத்தத்தை எதிர்ப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக இந்தியாவுக்கு எதிராகத் தான் அமையும். ஏனென்றால் கடந்த 34 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா 13வது திருத்தத்தை ஒரு வாய்ப்பாடு போல சொல்லி வருகிறது. எனவே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு தீர்வை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியா முன்வைக்கும் போது அதை எதிர்ப்பவர்கள் தவிர்க்கவியலாதபடி இந்தியாவையும் எதிர்க்க வேண்டித்தான் இருக்கும். ஆனால் இங்கே பிரச்சினை என்னவென்றால் அதற்காக இந்தியா ஒரு பகை நாடா என்பது தான்.

கிட்டு பூங்கா பிரகடனம் இந்தியாவை ஒரு நட்பு நாடாக சித்தரிக்கிறது. ஆனால் ஈழத்தமிழர்கள் இந்தியாவை நட்பு நாடாக பார்த்து அதை நம்பவும் தேவையில்லை, பகை நாடாகப் பார்த்து அதை எதிர்க்கவும் தேவையில்லை. அதை தமது நோக்கு நிலையிலிருந்து கையாள்வதே பொருத்தமாக இருக்கும். அதற்குப் பெயர் தான் ராஜதந்திரம்.

இந்தியாவை ஒரு நட்பு நாடாக நம்பினால் அதன் விளைவாக இந்தியாவின் மீது நம்பிக்கைகளை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். அது தான் முதலாம் கட்ட ஈழப் போரின் போது நடந்தது. ஆனால் இந்தியா ஒரு பேரரசு. அது ஈழத் தமிழர்களை அதன் பேரரசு நலன்களின் அடிப்படையில் தான் அணுகும். எனவே இதுவிடயத்தில் நட்பு — பகை என்பதெல்லாம் கிடையாது. நலன்சார் பேரம் தான் உண்டு. இந்தியாவை நட்பு பகை என்ற இருமைகளுக்கு அப்பால் கையாளப்பட வேண்டிய ஒரு பிராந்திய பேரரசு என்ற அடிப்படையில் பொருத்தமான ஒரு வியூகத்தை வகுப்பது தான் சரியாக இருக்கும். ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்தியாவை குறித்து ஒரு வித கறுப்பு — வெள்ளை சிந்தனை தான் உண்டு. ஒன்றில் இந்தியாவை நேசிக்கிறார்கள், அல்லது இந்தியாவை வெறுக்கிறார்கள். இரண்டுக்குமிடையே இந்தியாவை புத்திசாலித்தனமாக கையாள வேண்டும் என்ற நோக்கு நிலை ஈழத்தமிழர்கள் மத்தியில் மிகவும் பலவீனமாகவே காணப்படுகிறது.

ஈழத்தமிழர்கள் இந்தியாவை ஒரு நட்பு நாடாக பார்க்கும் நிலைமை எங்கிருந்து உற்பத்தியாகிறது? அது தமிழகத்தை மையமாக வைத்து சிந்திக்கும் போது தான் உற்பத்தியாகிறது. கடலால் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழகம் மொழியால் இனத்தால் பண்பாட்டால் ஈழத் தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு நிலத்துண்டு. எனவே தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் உள்ள இந்த பிணைப்பை — கனெக்டிவிற்றியை — வைத்துக் கொண்டு இந்தியாவை ஈழத்தமிழர்கள் பார்க்கிறார்கள்.

தமிழகம் எனப்படுவது கூட ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு சனத்தொகையோ, நிலப்பரப்போ அல்ல. அது பல அடுக்குகளைக் கொண்டது. அங்கே ஆளுங் கட்சி உண்டு. ஏனைய கட்சிகள் உண்டு. ஈழ அபிமானிகளாகக் காணப்படும் கட்சிகள் உண்டு. ஈழ உணர்வாளர்கள் உண்டு. இவை தவிர தமிழகத்தின் பொதுசனம் உண்டு. இதில் தமிழகத்தின் ஆளும் கட்சி இந்திய சமஸ்டி கட்டமைப்புக்கு கட்டுப்பட்டது. அது இந்திய நடுவண் அரசின் வெளியுறவுக் கொள்கையை மீறி ஈழத்தமிழர்களுக்காக முடிவெடுப்பதில் வரையறைகள் இருக்கும்.

ஏனைய கட்சிகளும் கூட ஈழத்தமிழர்களின் விவகாரத்தை தமது தேர்தல் அரசியல் நோக்கு நிலையிலிருந்தே அணுகும். இதுவும் ஈழத்தமிழர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஆனால் ஈழத்தமிழர்களின் நெருங்கிய நண்பர்களாக காணப்படும் கட்சிகளும் அரசியல்வாதிகளும் உணர்வாளர்களும் தேர்தல் மைய நோக்கு நிலைகளுக்கு அப்பால் ஈழத்தமிழர்களுக்காக அர்ப்பணிக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இது ஒரு சிறு தொகை. இது தவிர தமிழகப் பொதுசனங்கள் ஈழத்தமிழர்களுக்கு ஏதும் நடந்தால் கொதித்து எழுவார்கள். ஆனால் அக் கொதிப்பை மடைமாற்றவும் திசை திருப்பவும் தலைவர்களால் முடியும். இது தான் தமிழகம். எனவே தமிழகத்தை தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்ளக்கூடாது. தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான இனமொழி உறவை அடிப்படையாக வைத்து இந்தியா ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் தலையிடுகிறது என்ற ஒரே காரணத்துக்காக ஈழத் தமிழர்களின் விவகாரத்தை இந்தியா தமிழகத்துக்கு ஊடாகத்தான் பார்க்கும் என்றோ அல்லது இனமான உணர்வுக் கூடாகத் தான் அணுகும் என்றோ எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கையை அவ்வாறு விளங்கிக் கொள்ளவும் கூடாது.

ஒரு பேரரசின் வெளியுறவுக் கொள்கை அதன் அரசியல் பொருளாதார ராணுவ நலன்களின் அடிப்படையில் தான் வடிவமைக்கப்பட்டிருக்கும். அயல் நாடுகளுடனான உறவும் அவ்வாறு தான் அமையும். புதுடில்லிக்கு கொழும்புக்கும் இடையிலான உறவும் அப்படித்தான். எனவே அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார்நலன்சார் உறவுகளின் அடிப்படையில் தான் இந்தியா இலங்கையை அணுகும்.

அதிலும் கூட கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தைத் தான் அவ்வாறு அணுகும். கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தின் நலனை பகைத்துக் கொண்டு இந்தியா ஈழத்தமிழர்களை முழுமையாக நெருங்கிவராது. கொழும்பில் இருக்கும் அரசாங்கம் பணிய மறுக்கும் பொழுது ஈழத்தமிழர்களை ஒரு கருவியாகக் கையாண்டு அரசாங்கத்தின் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகிக்கும்.

இவ்வாறு ஈழத் தமிழர்களை ஒரு கருவியாக பயன்படுத்த விளையும் பொழுது அதில் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான இன ரீதியான,மொழி ரீதியான பண்பாட்டு ரீதியிலான இணைப்புகளை இந்திய மத்திய அரசு தனது புவிசார் அரசியல் நோக்கு நிலையிலிருந்து அணுகும். நிச்சயமாக ஈழத்தமிழர்களின் செண்டிமெண்டலான நோக்கு நிலைகளில் இருந்தோ அல்லது தமிழகத்தின் இன உணர்வு நோக்கி நிலைகளிலிருந்தோ அணுகாது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்திய — ஈழத்தமிழ் உறவை இந்த அடிப்படையில் தான் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால் ஈழத் தமிழர்களில் கணிசமானவர்கள் தமிழகத்துக்கும் தமக்கும் இடையிலான இனம் மொழி பண்பாடு சார்ந்த நெருக்கத்துக்கூடாக இந்திய மத்தியஅரசை விளங்கிக் கொள்ள முற்படுகிறார்கள். இது தவறு. இது விடயத்தில் தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் இடையிலான கனெக்ரிவிட்டியை இந்திய நடுவண் அரசு அதன் பேரரசு நோக்கு நிலையிலிருந்து பயன்படுத்துகிறது என்பது ஒரு கொடுமையான யதார்த்தம். ஏனென்றால் அரசுகள் எப்பொழுதும் அப்படித்தான் நடந்து கொள்ளும். இது மேற்கத்தைய அரசுகளுக்கும் பொருந்தும். சீனாவுக்கும் பொருந்தும். எனவே ஈழத் தமிழர்கள் இந்தியாவை சென்டிமென்டலாக அணுகும் அந்த நோக்கு நிலையில் இருந்து விடுபட வேண்டும். மாறாக புத்திபூர்வமாக அணுக வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லையென்றால் இந்தியாவுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற தர்க்கத்தை பலமாக முன் வைக்க வேண்டும். ஈழத்தமிழர்கள் மிக நீண்ட கடல் எல்லைகளின் சொந்தக்காரர்கள்.தமிழ்க் கடலை கட்டுப்படுத்தும் எந்த ஒரு நாடும் இந்தியாவின் தெற்கு மூலையை கட்டுப்படுத்தும். எனவே தமிழ்க் கடலை இழந்தால் இந்தியா தனது தெற்கு வாசலின் பாதுகாப்பையும் இழக்க நேரிடும். இந்த தர்க்கத்தை ஈழத்தமிழர்கள் முன் வைக்கலாம். இந்தியாவை நோக்கி ஈழத்தமிழர்கள் முன்வைக்கக்கூடிய கோரிக்கைகளும் அந்த அடிப்படையில் அமைவது நல்லது.

ஒரு மக்கள் கூட்டம் வெளிநாடுகளை நோக்கி அதன் கோரிக்கைகளை முன் வைக்கும் போது வெளிநாடுகள் ஏற்றுக் கொள்ளும் என்று பார்த்து அந்தக் கோரிக்கைகளை வடிவமைக்கத் தேவையில்லை. மாறாக தங்களுக்கு எது தேவை என்ற அடிப்படையில் உச்சமான கோரிக்கைகளை முன் வைக்கலாம். பின்னர் அதற்காக உழைக்க வேண்டும்.

இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன் வைத்திருக்கும் கட்சிகள் இந்த விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் 13வது திருத்தம் என்ற கோரிக்கையை ஈழத்தமிழர்கள் முன்னிலைப் படுத்த தேவையில்லை. அதேசமயம் 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பதாக கூறிக் கொண்டு இந்தியா தொடர்பான தனது அணுகுமுறைகளில் ஒரு குழப்பமான படத்தை வெளிக்காட்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இதில் ஒரு தெளிவான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அக்கட்சியின் தலைவர்கள் தாங்கள் இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்கு எதிர் இல்லை என்று கூறுகிறார்கள். ஆனால் 13ஐ அவர்கள் எதிர்க்கும் விதம் அக்கட்சியிடம் இந்தியாவை என்கேஜ் பண்ணுவதற்குரிய பொருத்தமான வெளியுறவுத் தரிசனம் ஏதும் உண்டா என்ற கேள்வியை எழுப்புகின்றது.

இந்தியா ஒரு பிராந்திய பேரரசு. ஈழத் தமிழர்கள் அரசற்ற ஓரினம். இனப்படுகொலை புலப்பெயர்ச்சி போன்றவற்றால் மெலிந்து போய் இருக்கும் ஒரு மக்கள் கூட்டம். ஈழத்தமிழர்கள் மத்தியில் மகப்பேற்று விகிதமும் கவலை தரும் வகையில் குறைந்து வருகிறது. சில ஆண்டுகளில் ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவின் இரண்டாவது சிறிய தேசிய இனமாக மாறக்கூடிய ஆபத்து உண்டு என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். எனவே ஈழத் தமிழர்கள் குறுகிய காலத்துக்குள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு ஒரு வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும். (20ம் பக்கம் பார்க்க)

# சீனாவை ஈழத்தமிழர்கள் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
-யதீந்திரா -



இன்றைய உலகளாவிய அரசியல் விவாதங்களில் சீனாவே முதன்மையான பேசுபொருளாகும். சீனாவின் பொருளாதார வளர்ச்சி தான் இதற்கு காரணமென்று சிந்தித்தால் அது அறிவுபூர்வமான பார்வையல்ல. ஏனெனில் மேற்குலகை பொறுத்தவரையில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி ஒரு பிரச்சினையல்ல. அவ்வாறாயின் எது பிரச்சினை? சீனா எவ்வாறானதொரு அரசியல் முறைமையின் ஊடாக வளர்ந்து செல்கின்றது என்பது தான் மேற்குலகின் பிரச்சினையாகும்.

சீனாவை மேற்குலக பொருளாதாரத்தோடு ஊடாடச் செய்யும் நோக்கில் தான் பில் கிளின்ரன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் உலக வர்த்தக நிலையத்தோடு ஊடாடுவதற்கான கதவை திறந்து விட்டது. இதன் மூலம் சீனா அதிகமாக மேற்குலகத்தோடு ஊடாடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இதன் மூலம் சீனா சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நகரும் அதன் மூலம் சீனாவின் அரசியல் ஒழுங்கு தாரளவாத ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் என்றே மேற்குலகம் கணித்தது. ஆனால் அது நிகழவில்லை. எனவே இங்கு பிரச்சினை சீனாவின் பொருளாரா வளர்ச்சியல்ல மாறாக சீனா எவ்வாறானதொரு அரசியல் முறைமையின் ஊடாக வளர்ந்து செல்கின்றது என்பது தான் இங்கு பிரச்சினையாகும். இது போன்றதொரு பிரச்சினை தான் முன்னர் சோவியத்திற்கும் — அமெரிக்காவிற்கும் இடையில் நிலவியது. அவ்வாறானதொரு நிலையை நோக்கி மீளவும் உலகம் நகரத் தொடங்கியிருக்கின்றது. இதன் காரணமாகத் தான் உலக அரசியல் விவாதங்களில் சீனா முதன்மையான நிலையில் நோக்கப்படுகின்றது.

இந்த விவாதங்களின் சந்தியில் தான் இலங்கையும் சந்தித்துக் கொள்கின்றது. பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இலங்கையர்கள் மத்தியில் சீனா ஒரு விடயமல்ல. நாடுகளுக்கு இடையிலான உறவுகள் எவ்வாறு நோக்கப்படுமோ அப்படித் தான் இலங்கையர்களால் சீனாவையும் நோக்கினர்.

சீனாவிற்கும் இலங்கைக்குமான அரசியல் பொருளாதார உறவு 1957இல் ஏற்படுத்தப்பட்ட றப்பர் அரிசி உடன்பாட்டுடன் ஆரம்பமாகின்றது. வரலாற்று ரீதியாக பார்த்தால் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வணிக தொடர்புகள் பற்றி நீண்ட கதைகளை கூறலாம். ஆனால் அவைகள் அரசியல் ரீதியில் முக்கியமான விடயமாக இருந்ததில்லை. இலங்கையின் சர்வதேச உறவுகள் என்பது இந்திய மற்றும் மேற்குலக தொடர்புகளின் வழியாகவே நோக்கப்பட்டு வந்தது.

முக்கியமாக இலங்கையின் சர்வதேச உறவுகளின் மையமாக இந்தியாவே இருந்தது. இந்த அடிப்படையில்தான் சிறிலங்காவின் வெளிவிவகார கொள்கையும் தீர்மானிக்கப்பட்டது. சிறிலங்காவின் வெளிவிவகார கொள்கை என்பது சிறிலங்காவை மாறி மாறி ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளின் அரசியல் நிலைப்பாடு மற்றும் அணுகுமுறைகளின் தொகுப்பாகும்.

இந்த அடிப்படையில் தான் டி.எஸ். சேனநாயக்க வழிவந்த ஐக்கிய தேசிய கட்சி முற்றிலும் மேற்கு சார்பான கொள்கையை கடைப் பிடித்தது. பண்டாரநாயக்க வழி வந்த கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடுநிலையான வெளிவிவகார கொள்கையை முன் வைத்தது. இந்த இரு கட்சிகளின் வழியாகவே கொழும்பின் வெளிவிவகார அணுகுமுறையை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால் மேற்படி இரண்டு பிரதான கட்சிகளும் உலகளாவிய அதிகாரப் போட்டிக்குள் சிறிலங்கா சிக்குப்பட்டு விடக் கூடாதென்னும் எச்சரிக்கையுடனேயே செயற்பட்டன. இதன் காரணமாகவே அணிசாரா கொள்கையில் உறுதியாக இருந்தன. ஆனால் 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையின் பாரம்பரிய அணுகு முறையில் மாற்றங்களை ஏற்படுத்த முற்பட்டது. ஜே.ஆரின் இந்த அரசியல் அணுகு முறையானது, அன்றைய சூழலில் உலக அரசியலை ஆக்கிரமித்திருந்த பனிப்போர் போட்டிக்குள் இலங்கையை சிக்க வைத்தது.

இதனால் இந்திராகாந்தி தலைமையிலான இந்தியா அதிருப்தியடைந்தது. ஏனெனில் இந்தியா அப்போது சோவியத் யூனியனுடன் கைகோர்த்திருந்தது. கொள்கை அடிப்படையில் அமெரிக்காவிற்கு எதிர் நிலையில் இருந்தது. ஜே.ஆரின் அணுகுமுறைக்கு பதிலடி கொடுக்க முற்பட்ட இந்தியாவோ இலங்கையின் உள் — விவகாரத்தில் நேரடியாக தலையீடு செய்தது. 1983இல் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அழித்தொழிப்பு வன்முறைகளை தொடர்ந்து பெருமளவான ஈழத்தமிழ்மக்கள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தனர். ஆறு கோடி தமிழ் மக்களை கொண்டிருக்கும் நாம் அயல் நாடான இலங்கையில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போது அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்னும் நிலைப்பாட்டை இந்திராகாந்தி அம்மையார் வெளிப்படையாகவே முன்வைத்தார். இதுவே பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தமாக பரிணமித்தது.

இந்தியாவை பொறுத்தவரையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் கசப்பான அனுபவங்களை கொடுத்திருந்தது. இந்திய ஆய்வாளர்களின் வார்த்தையில் கூறுவதானால் இந்தியா விரல்களை சுட்டுக் கொண்ட அனுபவத்துடன் இலங்கையிலிருந்து வெளியேறியது. இதன் பின்னர் இலங்கை விவகாரங்களில் முக்கியமாக தமிழர் விவகாரத்தில் இந்தியா ஒரு தலையிடாக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போதும் இந்தியா அமைதி காத்தது. மகிந்த ராஜபக்ச அரசாங்கம் இராணுவ — தளபாட உதவிகளை கோரிய போது இந்தியா அதனை முற்றிலுமாக நிராகரித்திருந்தது. தமிழ் மக்களின் உணர்வுகளை சீண்டும் வகையில் தாங்கள் செயற்படக் கூடாது என்பதில் புதுடில்லி உறுதியாக இருந்தது.

அதே போன்று மனித உரிமைகள் விவகாரத்தை முன்வைத்து அமெரிக்காவும் கொழும்பிற்கு இராணுவதளபாட உதவிகளை வழங்கவில்லை. இந்த இடம் தான் சீனாவிற்கும் — இலங்கைக்குமான புதிய அத்தியாயத்திற்கு பிள்ளையார் சுழியிட்டது. இந்த அத்தியாயத்தின் விளைவுகளை முன் வைத்தே நாம் இப்போது அதிகம் உரையாடிக் கொண்டிருக்கின்றோம். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது சீனா பெருமளவான இராணுவ உதவிகளை வழங்கியது. விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்னும் ராஜபக்சக்களின் இச்சைக்கு சீனா முற்றிலும் பக்கபலமாக இருந்தது. சீனாவின் துணையுடன் புலிகளை வீழ்த்தும் யுத்தத்தில் ராஜபக்சக்களின் இராணுவம் வெற்றிபெற்றது. சீனா தங்களுக்கு செய்த உதவிகளுக்கான நன்றிக் கடனாகவே மகிந்த ராஜபக்ச சீன சார்பு கொள்கையை கையிலெடுத்தார். அந்தக் கொள்கையே இன்றைய அரசியல் விவாதங்களுக்கான அஸ்திபாரமாகும்.

இப்போது சீனா தனது காலை அதிகம் இலங்கைக்குள் ஊன்றிவிட்டது. தமிழர் தாயகத்திற்குள்ளும் வரப் பார்க்கின்றது. சீனாவை பொறுத்தவரையில் தமிழர் தாயகம் என்று ஒன்றில்லை. சீனா, அனைத்தையும் சிறிலங்காவாகவே நோக்குகின்றது. அப்படித்தான் நோக்கும்.

அண்மைக் காலமாக சீன நிறுவனங்கள் வடக்கிற்குள் காலூன்றுவது தொடர்பான சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. இது தொடர்பில் தமிழ் தேசிய அரசியல் தரப்புக்கள் தங்களின் கண்டனங்களை பதிவு செய்திருக்கின்றனர். தற்போது இந்திய பிரதமரிடம் கோரிக்கையை முன் வைத்திருக்கும் ஆறு கட்சிகளின் கூட்டு இந்த விடயத்தில் தெளிவாக இருக்கின்றது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் ஒரு சிலரிடம் மாறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. அவர்கள் மிகவும் சொற்பளவிலானவர்கள் தான். அவ்வாறானவர்களோ சீனாவை எதிர்ப்பது புத்திசாலித்தனமல்ல என்றவாறு அரசியல் வகுப்பெடுத்தல்களில் ஈடுபட முயற்சிக்கின்றனர். இந்த இடத்தில்தான், சீனாவை ஈழத் — தமிழர்கள் எவ்வாறு நோக்க வேண்டுமென்னும் கேள்வி எழுகின்றது.

உண்மையில் சீனாவை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது இங்கு ஒரு விடயமல்ல. ஈழத் தமிழர் எப்படியான அரசியல் விழுமியங்களோடு தங்களை சர்வதேச சமூகத்தின் முன்னால் அடையாளப்படுத்தப் போகின்றனர் என்பது தான் இங்குள்ள கேள்வியாகும். ஈழத் தமிழர்கள் எவருடன் நின்றால் தங்களது கோரிக்கைகளை சர்வதேச அரங்குகளில் முன் வைக்க முடியும்? எவருடன் நின்றால் தங்களின் கோரிக்கையை சர்வதேச அரங்குகளில் நீர்த்துப் போகாமல் பாதுகாக்க முடியும்? எவருடன் நின்றால் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையுண்டு என்பதை பேணிப் பாதுகாக்க முடியும்? சீனாவிடம் செல்வதன் மூலம் இதில் எந்த ஒன்றையாவது ஈழத் தமிழர்களால் பேணிப் பாதுகாக்க முடியுமா? சீனா தொடர்பில் சிந்திப்பவர்கள் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் இவை தான்.

சமீப காலமாக இந்தியாவுடன் பேசி என்ன பயன் — ஏன் நாங்கள் சீனாவை நெருங்கக் கூடாது என்றவாறான கேள்விகளை புலம்பெயர் சூழலிலும் ஆங்காங்கே மெலிதாக எட்டிப் பார்க்கின்றது. இதில் பாரதூரமான ஆபத்துண்டு. ஏனெனில் ஆழம் அறியாமல் காலை விட்டால் இறுதியில் ஓரளவு வாய்ப்பான பங்கங்களை கூட இழக்க நேரிடலாம். ஏனெனில் சீனாவிற்கு எதிரான போக்கொன்று மேற்குலக நாடுகளில் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான சூழலில் இந்திய மற்றும் மேற்குலக நாடுகளின் ஆதரவை பெற வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கின்ற ஈழத் தமிழர்கள் தேவையற்ற செயல்களில் ஈடுபட்டு நிலைமைகளை மேலும் சிக்கலுக்குள்ளாக்கிவிடக் கூடாது. உள்ளதையும் கெடுத்தானாம் ஆண்டி என்னும் நிலைமையை ஏற்படுத்திவிடக் கூடாது.

சீனா அடிப்படையிலேயே மனித உரிமை மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரான ஒரு நாடு. உலகின் ஜனநாயக நெறிமுறையான, தேர்தல்களில் மூலம் மக்கள் தலைவர்களை தெரிவு செய்வதை ஏற்றுக் கொள்ளாத நாடு. வாழ்நாள் ஜனாதிபதியை கொண்டிருக்கும் நாடு. தலையிடாக் கொள்கை என்னும் அடிப்படையிலான வெளிவிவகார கொள்கையை கொண்டிருக்கும் நாடு.

அதாவது நாடுகளின் உள்விவகாரத்தில் ஏனைய நாடுகள் தலையீடு செய்வதை எதிர்க்கும் நாடு. உதாரணமாக தமிழர் விகாரத்தை எடுத்துக் கொண்டால் சீனாவை பொறுத்த வரையில் இது சிறிலங்காவின் உள்விவகாரம் அதில் மனித உரிமைகள் என்னும் அடிப்படையில் அமெரிக்காவோ ஏனைய மேற்குலக நாடுகளோ தலையீடு செய்யக் கூடாது. இந்த அடிப்படையில் தான் சிறிலங்காவின் பெறுப்பு கூறல் தொடர்பான ஜெனிவா பிரேரணைகளின் போது சீனா கொழும்மை பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

அவ்வாறான ஒரு நாட்டிலிருந்து ஈழத் தமிழர்கள் நீதியை அரசியல் ஆதரவை கோர முடியுமா? இந்த அடிப்படையான கேள்வியிலிருந்து தான் ஈழத் — தமிழர்கள் சீனாவை விளங்கிக் கொள்ள வேண்டும். ஈழத் தமிழர்களின் ஆதரவுத் தளம் எப்போதுமே இந்தியாவும் மேற்குலகமும் தான். இந்தியாவும் மேற்குலகமும் இப்போது முன்னர் எப்போதுமில்லாதளவிற்கு நெருக்கிச் செயற்படுகின்றன. அதே போன்று முன்னர் எப்போதுமில்லாதவாறு மேற்குலக நாடுகள் சீன விஸ்தரிப்பு வாதம் தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்கின்றன. மேற்குலக தாராளவாத நாடுகளை பொறுத்த வரையில் சீன எழுச்சி தான் அவர்களுக்கு முன்னாலுள்ள முதலாவது சவாலாகும்.

நான் மேலே குறிப்பிட்ட சீனாவின் அரசியல் முறைமை தான் இதற்கான காரணமாகும். இந்த பின்புலத்தில் தான் பைடன் (அமெரிக்கா) நிர்வாகத்தின் ஆசிய கொள்கை விவகாரங்களை கையாளும் உயர் அதிகாரியான பேராசிரியர் ஹேர்ட் ஹம்பல் இவ்வாறு கூறியிருந்தார். அதாவது சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஊடாட்ட (Engagement) காலம் முடிவுக்கு வருகின்றது. ஏனெனில் சீனாவுடன் ஊடாடுவதன் மூலம் சீனாவிற்குள் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்னுமடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அமெரிக்க முயற்சிகளும் தோல்வியடைந்து விட்டன. இந்த பின்புலத்தில் தான் அமெரிக்கா அதன் பழைய சோவியத் கால — ஒரு எல்லைக்குள் முடக்கும் மூலோபாயத்தை (Containment) கையிலெடுத்திருக்கின்றது. இந்தோ — பசுபிப் (Indo-Pacific) குவாட் (Quad), ஒக்கஸ் (AUKUS) இவ்வாறான தந்திரோபாயங்கள் அனைத்தும் சீனாவை (20ம் பக்கம் பார்க்க)



# கனடாவில் போராட்டங்களுக்காக அவசரகால நிலை பிரகடனம்

உலகின் இயல்பை மாற்றம் செய்து பல இலட்சக்கணக்கான உயிர்களை காவு வாங்கிய கொரோனா எனும் கொடூரத்தின் தாக்கம் இன்னும் நம்மை விட்டப்பாடில்லை. ஏதோ ஒரு வகையில் அதன் பிடி இன்னும் நம்மை இறுக்கிக் கொண்டு தான் இருக்கிறது. இன்னும் கொரோனாவை வெல்லும் மருந்து விஞ்ஞானத்தினால் கண்டு பிடிக்க முடியவில்லை.

தடுப்பூசிகள் கொண்டு வரப்படாலும் அதன் பக்கவிளைவுகளை யார் அறிவார். ஆயினும் பல அரசுகள் மக்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருக்கின்றன.

உக்ரைன் விவகாரம் உச்சமடைந்துள்ள நிலையில் ரஷ்யாவை சமாதானப்படுத்தும் முயற்சியாக அண்மையில் ரஷ்யா சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரான் தடுப்பூசி செலுத்தாமையால் கடுமையான கெடுபிடிகளுக்கு ஆளாக்கப்பட்டதாக தகவல் வெளியாகியதை நாம் அறிவோம். ஒரு அரச தலைவருக்கே இந்த நிலை எனில் சாதாரண மக்களது நிலை கூற வேண்டுமா?

ஒவ்வொரு நாடும் ஏதேதோ தடுப்பூசியை பொதுமக்களுக்கு செலுத்திக் கொண்டிருக்கின்றன. ஒரு ஊசியோடு கொரோனா முடிந்து விடும் என்றால் இல்லை இரண்டாவது தடுப்பூசி செலுத்த வேண்டும் என்றார்கள். பின்னர் மூன்றாவது என்றார்கள். அடுத்து நான்கு ஐந்து பூஸ்டர் என தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் தொடர்ந்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் கொரோனா அலை ஓய்ந்த பாடில்லை.

இந்த பூமியில் ஒவ்வொரு நிமிடமும் ஏதோ ஒரு மூலையில் கொரோனாவின் தாக்கத்துக்கு ஏதோ ஒரு உயிர் காவு வாங்கப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. அது மட்டும் அல்ல ஒவ்வொரு தனிமனிதன் தொட்டு நாடு, உலகம் என அனைவரினது பொருளாதார அரசியல் என அனைத்தையும் ஆட்டம் காண வைத்துக் கொண்டு இருக்கின்றது கொரோனா.

அந்த வகையில் தற்போது கனடாவில் இடம் பெற்றுள்ள சம்பவத்திற்கும் பின்னனி கொரோனா தான் என்றால் நம்ப முடிகிறதா.. ஆம் கொரோனாவை தடுக்க தடுப்பூசி செலுத்த வேண்டும் என்பதில் தான் பிரச்சினை உருவாகியுள்ளது.

கனடா எப்போதும் சிறுபான்மை மக்கள் சுதந்திரமாக மகிழ்சியாக வாழ்வதற்கு உரிய இடம். அதுவும் தமிழர்களுக்கு தனி சிறப்பு. உலகமே தமிழர்களை நாடற்றவர்களாக்கி வேடிக்கை பார்த்த வரலாறுகளுக்கு இடையே தமிழனுக்கு என்று தனி கலாசார மாதமாக தை மாதத்தை அறிவித்து அழகு பார்க்கிறது கனடா. தமிழின் பூர்வீக மண்ணில் அதனை இரண்டாம் மொழியாக ஏற்றுக் கொள்ள கூட தயங்குகின்றனர். ஆனால் அங்கு தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படுகின்றது. இன்று அந்த கனடாவில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை முழு உலகையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இதன் பின்னணியை நோக்குவோமானால் கொரோனாவின் கடும் தாக்கத்திற்கு பின்னர் கனடாவில் பொது இடங்களில் நடமாடுவோர், பொதுப் போக்குவரத்தில் பயணிப்போருக்கு தடுப்பூசி சான்றிதழ் கட்டாயமாக்கப் பட்டது. மேலும் லொறி சாரதிகளுக்கு தடுப்பூசி கட்டாயம் என்றும் தடுப்பூசி



போடாதவர்கள் ஒரு வாரம் தனிமைப் படுத்தப்படுவர் என்றும் அரசு உத்தர விட்டது.

கனடா எல்லையை கடக்கும் லொறி சாரதிகள் கட்டாயம் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என பிரதமர் ஜஸ்டின் ரூடோ உத்தரவு பிறப்பித்தார். இதனை எதிர்த்து கனடாவில் கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒட்டவா பாலத்தை போராட்டக்காரர்கள் முடக்கியதால் அமெரிக்கா கனடா இடையிலான வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முக்கிய இடங்களில் கட்டாய தடுப்பூசி எதிராக லொறி சாரதிகள் போராட்டத்தை தொடர்ந்தனர். அங்காங்கே லொறிகள் நிறுத்தப்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தினர்.

கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கும் தூதரக பாலத்தில் போராட்டக்காரர்கள் நெடும் தூரத்திற்கு லொறிகளை நிறுத்தி வைத்ததால் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் பாதிக்கப்பட்டது. இது தொடர்பாக கனடா மற்றும் அமெரிக்க வர்த்தக தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிக்கையும் விடுத்தனர்.

இந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கான ட்ரக்குகளுடன் சாரதிகள் கலந்து கொண்டனர். சுமார் ஒரு இலட்சம் எண்ணிக்கையிலான ட்ரக்குகள் இந்த முற்றுகையில் கலந்து கொண்டிருக்கலாம் என கூறப்பட்டது.

ஆயிரக்கணக்கான ட்ரக்குகள் மைல் கணக்கில் நெடுஞ்சாலைகளில் வரிசை கட்டி நின்றமை சமூக வலைத் தளங்களில் பேசு பொருளாக அமைந்தது.

சரக்கு போக்குவரத்து முடங்கியதால் அத்தியாவசிய பொருட்கள் கூட கிடைக்காமல் மக்கள் அவதிக்கு ஆளாகினர். இதனால் கனடாவில் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பிரதமர் ரூடோ பல முறை எச்சரித்தும் போராட்டத்தை கைவிட சாரதிகள் தயாராக இல்லை. இந்த நிலையில் சாரதிகளுக்கு ஆதரவாக மக்களும் போராட்டத்தில் குதித்ததால் கனடாவில் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

இந்த நிலையில் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர கனடா அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கனடா நாட்டில் நடைபெற்று வரும் எல்லைப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக பிரதமர் ஜஸ்டின் ரூடோ நாடு முழுவதும் அவசர நிலை சட்டத்தை அறிவித்துள்ளார். அதன்படி போராட்டக்காரர்கள் உடனடியாக கைது செய்யப் பட்டு அவர்களது லொறிகள் பறிமுதல் செய்யப்படும்.

ட்ரக்குகள் சார்ந்த வங்கிக் கணக்குகள் முடக்கப்படும். வாகனங்களின் காப்புறுதிகள் நிறுத்தி வைக்கப்படும். மேலும் போராட்டக்காரர்களால் போக்குவரத்து முடக்கி வைக்கப்பட்டுள்ள பாலங்களை உடனடியாக திறக்கவும் ரூடோ உத்தரவிட்டுள்ளார்.

போராட்டங்களுக்காக கனடாவில் அவசர நிலையை பிரகடனப்படுத்துவது இதுவே முதல் முறை என சொல்லப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு தூதரக பாலத்தில் நிறுத்தப்பட்ட லொறிகள் அகற்றப்பட்டு கனடா பொலிஸாரால் போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்து ஒட்டாவா மேயர் ட்ரீவ் டில்கன்ஸ் கூறும் போது "இன்று முதல் தேசிய பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட முடக்கம் முடிவுக்கு வருகிறது" என்று தெரிவித்தார்.


போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பிறகு தூதரக பாலத்தில் மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே போக்குவரத்து தொடங்கப்படும் என்று கனடா அரசு தெரிவித்துள்ளது.

மேலும் இந்த போராட்டத்தை ஒருங்கிணைத்தவர்களுக்கு நிதி ஆதாரம் எப்படி கிடைத்தது என விசாரிக்க தற்போது கனடா அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த போராட்ட ஒருங்கிணைப்புக்காக மில்லியன் கணக்கிலான டொலர்கள் நிதி திரட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

1970ஆம் ஆண்டுக்கு பிறகு கனடாவில் அவசர நிலை சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. முன்னதாக கனடாவின் Quebec மாகாணத்தில் உள்நாட்டு கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகள் காரணமாக அப்போதைய கனடா பிரதமர் பியரே ரூடோ அவசரநிலையை பிரகடனம் செய்தார். இவர் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ரூடோவின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

கொரோனாவின் விளைவுகள் பல நாடுகளில் பட்டினியை ஏற்படுத்தியது. பல அரசுகளை ஆட்டம் காண வைத்தது. வறுமைக்கு இழுத்து சென்றது. உறவுகளை கதறவைத்தது. அமைதி பூங்காக்களை கூட போராட்டகளங்களாகி விட்டது. இன்னும் இந்த கொரோனதாக்கம் உலகத்தில் என்ன என்ன செய்ய போகிறதோ யார் அறிவார்.

நாம் தடுப்பூசி செலுத்த வேண்டுமா கூடாதா என்பது நம்முடைய தனிபட்ட சுதந்திரம் தான். நம்மை வற்புறுத்தி நம் உடலுக்குள் ஒரு மருந்தை செலுத்துவது எமது அடிப்படை உரிமையை பறிக்கும் செயல் என்றாலும் கொரோனாவை தடுக்க ஒரே வழி தடுப்பூசி எனும் போது அரசுகள் தான் என்ன செய்யும்.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# புதுடில்லியில் மறைக்கப்பட்ட உண்மைகள்

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் இந்தியப் பயணம் எதிர்பார்த்த இலக்குகளை நிறைவேற்றியுள்ளதா என்ற கேள்வியுடன் நிறைவடைந்திருக்கிறது. அமைச்சர் பீரிஸின் இந்தப் பயணத்துக்கு முக்கியமானதொரு தடைக்கல்லாக இசைக்குயில் லதா மங்கேஸ்கரின் மறைவு அமைந்துவிட்டது.

அமைச்சர் பீரிஸ் புதுடில்லியில் தரையிறங்கிய போது பிரதமர் மோடி உள்ளிட்ட பிரபலங்கள் மும்பையில் லதா மங்கேஸ்கருக்கு இறுதி அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார்கள். அத்துடன் இந்திய அரசாங்கம் அவரது மறைவை முன்னிட்டு இரண்டு நாள் துக்கம் கடைப் பிடித்ததால் அனைத்து அரசாங்க நிகழ்வுகளும் இரத்துச் செய்யப்பட்டன. இதனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அமைச்சர் பீரிஸுக்கு வழங்கவிருந்த மதிய விருந்துக்கும் தடை ஏற்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வெளிவிவகாரச் செயலாளர் ஹாஷ் வாத்தன் ஷ்ரிங்லா இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோருடனான சந்திப்புகள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே புதுடெல்லிக்குச் சென்றிருந்தார் அமைச்சர் பீரிஸ். ஆயினும் எப்படியாவது இந்தியப் பிரதமரைச் சந்தித்து விடலாம் என்று அவர் எதிர்பார்த்தார்.

ஏனென்றால் கடைசியாக புதுடெல்லிக்குப் பயணம் செய்த அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் கூட பிரதமர் மோடியைச் சந்திக்க முடியவில்லை. அதனால் அவரைச் சந்தித்து பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதற்கும் ஜெனிவா நெருக்கடிகளை தீர்ப்பதற்கும் இந்தியாவின் உதவியைக் கோரும் திட்டம் அமைச்சர் பீரிஸிடம் இருந்தது.

ஆனால் லதா மங்கேஸ்கரின் மறைவு பாராளுமன்ற அமர்வு உள்ளிட்ட இந்தியப் பிரதமரின் நிகழ்ச்சி நிரல்களைத் தாண்டி அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கைகூடவில்லை.

அந்த ஏமாற்றத்துடனேயே அவர் நாடு திரும்பிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர் பீரிஸின் இந்தியப் பயணத்தின் முக்கியமானதொரு அடைவு என்றால் அது இந்திய ஊடகங்களின் வெளிச்சத்தை பயன்படுத்திக் கொண்டது தான். அவர் 6ஆம் திகதி புதுடெல்லியில் சென்று தரையிறங்கியவுடன் பிரபல ஊடகவியலாளர் நிதின் கோகலேவுக்கு செவ்வியளித்தார்.

அதையடுத்து அடுத்தடுத்த நாட்களில் அவர் முழுமையாக ஊடகங்களின் தனிப்பட்ட கலந்துரையாடல்களுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தார்.

இந்தியாவின் பிரதான ஆங்கில நாளிதழ்கள் செய்தி நிறுவனங்கள் தொலைக் காட்சிகள் எல்லாமே அவரிடம் செவ்வி கண்டிருந்தன. இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில் இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் உள்ள அதனைச் சார்ந்த கரிசனைகளுக்கே இந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்திருந்தன.

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் இந்தியாவின் நலன்களைப் பாதிக்காது என்ற உத்தரவாதத்தைக் கொடுப்பதிலேயே பீரிஸ் கவனம் செலுத்தியிருந்தார். எனினும் அதனையும் தாண்டிய இரு தரப்பு உறவுகள் மற்றும் விவகாரங்களுக்கே இந்திய தரப்புடனான சந்திப்புகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அமைச்சர் பீரிஸை முதலில் பிரதிநிதிகள் குழுவுடனும் பின்னர் தனியாகவும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கிறார். இதன் போது குறிப்பாக தமிழர் விவகாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் நீதியான சமத்துவமான அமைதியான கௌரவ



மாக தமிழர்கள் வாழுகின்ற நிலையை உறுதிப்படுத்துமாறும் அதற்கு அதிகாரப் பகிர்வு முக்கியமானது என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தியிருக்கிறார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் பயணம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக புதுடெல்லியில் உள்ள இலங்கைத் உயர் ஸ்தானிகரகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்ததுடன் தமிழர் விவகாரம் குறித்து பேசப்பட்டதாக எந்தக் குறிப்புமே இடம் பெறவில்லை.

பொதுவாக இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் அல்லது தலைவர்கள் சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்களையோ எட்டப்பட்ட இணக்கப்பாடுகளையோ வெளிப்படுத்தும் கூட்டறிக்கைக்கள் வெளியிடப்படுவது வழக்கம்.

ஆனால் இந்திய - இலங்கை வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பின் பின்னர் கூட்டறிக்கை ஏதும் வெளியாகவில்லை. அமைச்சர் பீரிஸின் பயணம் வெற்றிகர மானதாக இருந்திருப்பின் இருதரப்பு கூட்டறிக்கை வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

பேசப்பட்ட விடயங்களை உள்ளடக்குவதில் காணப்பட்ட முரண்பாடுகள் தான், கூட்டறிக்கை வெளியிடப்படுவதில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே பஷில் ராஜபக்ஷவின் பயணத்தின் போதும் அவ்வாறான நிலையே காணப்பட்டது. இலங்கை அரசாங்கம் கூட்டறிக்கைகளை வெளியிடும் விடயத்தில் அவதானமாக இருப்பது கவனிக்கத்தக்கது.

ஏனென்றால் 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைக்கு வந்த ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனுடன் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டிருந்தார். அந்தக் கூட்டறிக்கை தான் இன்று வரை இலங்கையின் கழுத்துக்கு விழுந்த சுருக்காக இருக்கிறது.

அந்த கூட்டறிக்கையில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாததை சுட்டிக்காட்டியே ஜெனிவா தீர்மானங்கள் அனைத்தும் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

எனவே இந்தியா உள்ளிட்ட எந்த தரப்புடனும்கூட்டறிக்கையை வெளியிடுவதில் இலங்கை அரசாங்கம் அவதானமாக இருக்கிறது. குறிப்பாக தமிழர் விவகாரத்தை உள்ளடக்கிய கூட்டறிக்கைகளை தவிர்த்தே வருகிறது. புதுடெல்லி சந்திப்புகளில் தமிழர் விவகாரம் குறித்தும் பேசப்பட்டிருக்கிறது. அதனை உள்ளடக்காமல் கூட்டறிக்கையை வெளியிடுவது இந்தியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

தமிழர் விவகாரத்தை இந்திய கவனிக்கத் தவறி விட்டது என்ற கருத்தை ஏற்படுத்தும்.

அதேவேளை அந்த விவகாரத்தை உள்ளடக்கினால் தமிழர் பிரச்சினைக்கான இந்தியாவின் வலியுறுத்தலை ஏற்றுக் கொண்டதாகி விடும்.

அதனால் தான் மிக கவனமாக கூட்டறிக்கை தவிர்க்கப்பட்டு இலங்கை உயர்ஸ் தானிகரகமும் இந்திய வெளிவிவகார அமைச்சும் தனித்தனியான அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன.

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த பிரித்தானியாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரிக் அகமட் பிரபு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையானது சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களுக்கு முரணானதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆக தமிழர் விவகாரத்துக்கு சர்வதேச அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ இல்லையோ அதுபற்றி பேசப்படும் தருணங்களில் அதற்கான முக்கியத்துவத்தை குறைப்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. அமைச்சர் பீரிஸின் இந்தியப் பயணத்தில் பிரதமர் மோடி அவரைச் சந்திக்கவில்லை.

எனினும் மோடியின் இன்னொரு முகமாக பார்க்கப்படும் இந்தியாவின் 'ஜேம்ஸ் பொண்ட்" என்ற அழைக்கப்படும் அஜித் டோவல் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சக்களின் விரிவான தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ள

**கட்டுரையாளர்:**
**இந்தியாவில் இருந்து**
**கேணல் ஹரிஹரன்**



நிலையில் இந்த நிலைக்கு இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை தவறுகளே காரணம் என்று விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் தலைவர்கள் பலரும் சுட்டிக் காட்டுகின்ற நிலையில் அஜித் டோவலுடனான சந்திப்பு கவனத்தை ஈர்த்திருக்கிறது.

அண்மைக் காலத்தில் இந்தியா தனது கேந்திர நலன்களைப் பாதுகாப்பதில், கவனம் செலுத்துகின்ற சூழலில், அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விடயங்களை தவிர்க்கவே முற்படும். தமிழர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களின் மீதான இந்தியாவின் கவனிப்புக் குறையும் போது ஏற்படக் கூடிய தாக்கங்களையும் இந்தியா கவனத்தில் கொள்ளும்.

இந்த மாத நடுப்பகுதியில் பஷில் ராஜபக்ஷ புதுடெல்லிக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தின் போதும் இந்திய வெளிவிவகார அமைச்சர் அடுத்த மாதம் இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தின் போதும் இந்தியப் பிரதமர் மோடி அடுத்த மாத இறுதியில் மேற்கொள்ளலாம் எனக்கருதப்படும் பயணத்தின் போதும் இந்த விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

அடுத்தடுத்து வரக்கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இலங்கை அரசாங்கம் மூடி மறைப்புகளைச் செய்ய முடியாது என்பது அத்தகைய தருணங்களில் வெளிப்படும்.

# ஈழத்தமிழ் மக்களின் கோரிக்கைக்கு எந்தளவுக்கு இந்தியா தலை சாய்க்கும் என்று தெரியாத நிலை



இன்று தமிழ் மக்களின் கோரிக்கைக்கு எந்தளவுக்கு இந்தியா தலை சாய்க்கும் என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம் பெற்ற தமிழ் கட்சிகளின் ஒருங்கிணைந்த கருத்தாடல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நாட்டில் தமிழ் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அதற்கு தீர்வு தீர்வு என்று கூறி களைத்து விட்டோம். ஆகவே இதற்கு ஒரே ஒரு தீர்வு தான். ஈழத்தமிழர்களும் சர்வதேசமும் இணைந்தால் மட்டுமே இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்.

நாம் கடந்த காலத்தை மறந்து சிறப்பாக வழி நடத்தக் கூடிய தலைவர்கள் உருவாக வேண்டும். ஜப்பான் மீது அமெரிக்க வீசிய குண்டு காரணமாக அன்று ஜப்பான் நிலை குலைந்தது. அதற்காக ஜப்பான் மீண்டு எழவில்லையாக பின்னர் அமெரிக்காவுடன் சிறப்பான உறவை பேணவில்லையா? இதை எல்லாம் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். 1989ஆம் ஆண்டு நாட்டின் ஜனாதிபதி, பிரேமதாசா இந்திய படைகளை வெளியேற்றினார். அப்போது நாம் இந்தியாவை பகைத்து விட்டோம். இப்போது தமிழ் கட்சிகள் சேர்ந்து 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கடிதம் அனுப்பியுள்ளனர். இது எந்தளவுக்கு இந்தியா எம்மை கருத்தில் கொள்ளும் என்று தெரியவில்லை. ஆகவே கடந்த கால கசப்புகளை மனதில் இருந்து அடுத்த கட்ட நகர்வை சரியாக மேற்கொள்ள வேண்டும். கட்சிப் பூசல்கள் மக்களுக்கு தீர்வைத் தராது என்றார்.

# மீண்டும் ஒரு ஜெனிவா கூட்டத் தொடரை நோக்கி...

கடந்த மாதம் 27ஆம் தேதி ஐரோப்பிய நாடாளுமன்ற இணைக்குழு முன்னிலையில் இலங்கையின் மனித உரிமை மற்றும் தொழிலாளர் உரிமை குறித்து கருத்துக்கள் பரிமாற்றப்பட்ட ஒரு மெய்நிகர் சந்திப்பில் அம்பிகா சற்குணநாதன் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக தனது கருத்துக்களை தெரிவித்திருந்தார். அக்கருத்துக்களுக்கு இலங்கைத்தீவின் வெளிவிவகார அமைச்சு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

அம்பிகா சர்குணநாதன் ஒரு சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் ஆவார். கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது கூட்டமைப்புடன் காணப்பட்டார். அவர் மேற்படி மெய்நிகர் சந்திப்பின் போது தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்துக்கு சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இலங்கைத் தீவின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக அம்பிகா பின்வரும் கருத்துக்களை தெரிவித்துள்ளார்...

முதலாவது போதைப்பொருள் கடத்தப்படுவதற்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் சந்தேக நபர்கள் முறையற்ற விதத்தில் கைது செய்யப்படுவதாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கொலை செய்யப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். அதாவது போதைப் பொருட் குற்றவாளிகளை கையாளும் விடயத்தில் அரசாங்கம் என்கவுண்டர் மூலம் குற்றவாளிகளை கொல்வதாக ஒரு குற்றச்சாட்டு பரவலாக உண்டு. ஒரு பெரும் தொற்றுநோய் சூழலுக்குள் நாட்டின் கவனம் வைரஸின் மீது குவிந்திருக்க அரசாங்கம் போதைப்பொருள் குற்றவாளிகளில் ஒரு பகுதியினரை அவ்வாறு கொன்று விட்டதாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.

இரண்டாவதாக அரசாங்கம் அமைச்சுக்களை இராணுவ மையப்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். மூன்றாவதாக, அரசு அதிகாரிகளின் வன்முறைகள் தொடர்பாக குற்றம் சாட்டியுள்ளார். நாலாவதாக. ஒரே நாடு ஒரே சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணி குறித்து விமர்சித்துள்ளார். ஐந்தாவதாக கிழக்கு மாகாணத்துக்காக ஜனாதிபதி நியமித்த தொல்லியல் செயலணி குறித்து விமர்சித்துள்ளார். ஆறாவதாக சமூக நல்லிணக்கத்தை பாதுகாப்பது தொடர்பில் அரசாங்கம் அக்கறையோடு இல்லஎன்றும் விமர்சித்துள்ளார்,

இந்த விமர்சனங்களின் அடிப்படையில் அரசாங்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்றும் அதன் கேட்டிருக்கிறார். குறிப்பாக ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பான அழுத்தத்தின் மூலம் அரசாங்கம் மனித உரிமைகளைப் பேணுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

இந்த மாதம் 29ஆம் திகதி நாற்பத்தி ஒன்பதாவது ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கும் ஒரு பின்னணியில் அம்பிகாவின் கருத்துக்கள் அரசாங்கத்துக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. மேலும் வரும் ஏப்ரல் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் ஜிஎஸ் பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பான முடிவை எடுக்க இருப்பதனால் மேற்கண்ட கருத்துக்கள் அரசாங்கத்தை பாதிக்கும் என்றும் அரசாங்கம் நம்புவதாக தெரிகிறது. ஒரு மனித உரிமைகள் சட்டத்தரணிக்கு எதிராக ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சு அறிக்கை விடுமளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. இது இலங்கையின் மனித உரிமைகள் நிலவரத்தை வெளிப்படுத்தும் ஒரு குறிகாட்டி அல்லது குறியீடு எனலாம்.

மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பிக்கவிருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கம் கடுமையாக ஐநாவிக்கான வீட்டு வேலைகளை செய்து வருகிறது. ஒருபுறம் நீதிக்கான அணுகல் என்ற தலைப்பில் நீதியமைச்சரும் வெளிவிவகார அமைச்சரும் வடக்கிற்கு விஜயம் செய்தார்கள். இன்னொரு புறம் ஒரு தொகுதி அரசியல் கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஈஸ்டர் குண்டு வெடிப்புக்குப் பின் கைது செய்யப்பட்ட முஸ்லிம் சட்டச்



செயற்பாட்டாளரும் மற்றொரு கவிஞரும் இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்து ஒரு புதிய சட்டத்தை வரையும் நடவடிக்கைகளில் அரசாங்கம் உண்மையாக இருப்பதாக ஒரு தோற்றம் கட்டி எழுப்பப்படுகிறது. புதிய சட்ட வரைவை மனித உரிமைகள் ஆர்வலர்களும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்த்திருக்கிறார்கள். எனினும் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக அகற்றும் நிலையில் இல்லை என்று தெரிகிறது.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் அம்பிகாவின் வாக்குமூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று அரசாங்கம் பதட்டம் அடைவதாக தெரிகிறது. எனினும் இந்தியாவை அரவணைப்பதன் மூலம் ஜெனிவா கூட்டத் தொடரை சமாளிப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

அண்மையில் அமைச்சர் பீரிஸ் புதுடில்லிக்கு விஜயம் மேற் கொண்டார். இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான தருணத்தில் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கியுள்ள 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி இலங்கைத்தீவைப் பொறுத்த வரை மிகவும் பெறுமதியானது. தனது இந்திய விஜயம் தொடர்பாக ஜி.எல். பீரிஸ் கருத்துக்கூறும் போது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு, பரிவர்த்தனை உறவில் இருந்து கேந்திரக் கூட்டாளி உறவாக பரிணமித்துள்ளது என்று கூறியுள்ளார். இலங்கை எப்பொழுதும் நம்பியிருக்கக் கூடிய உண்மையான நண்பன் இந்தியாவாகும் என்பதை இலங்கை மக்கள் அதிகளவில் அங்கீகரித்திருப்பதாகவும் கூறியுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவு எப்போதும் இலங்கைக்கு ஆதரவானதாக இருக்கும் என அமைச்சர் ஜெய்சங்கர் இதன்போது உறுதியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

சந்திப்பின் போது இந்திய வெளியுறவு அமைச்சர் இனப்பிரச்சினை தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் வழமையானவை. பொத்தாம் பொதுவான வார்த்தைகளைக் கொண்டவை. கூட்டிப் பானவை அல்ல. குறிப்பாக இந்திய பிரதமருக்கு ஆறு கட்சிகள் கூட்டாக சேர்ந்து ஒரு கடிதத்தை அனுப்பிய பின்னரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் அதே பழைய பாணியில் அதே பழைய பொத்தாம் பொதுவான வார்த்தைகளைப் பயன்படுத்தித்தான் கருத்துத் தெரிவித்திருக்கிறார். வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்யும் மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்களும் குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்களும் அவ்வாறு தான் கருத்துத் தெரிவிக்கின்றனர். கடந்த ஆண்டு வடக்கிற்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு ஒன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்த போது ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பாக அவ்வாறான கருத்துக்களைத் தான் தெரிவித்தது. அரசாங்கத்துக்கு எதிராக அந்த வரிச்சலுகையை நிறுத்தினால் அரசாங்கம் மேலும் தமது பிடியிலிருந்து விலகிச் சென்றுவிடும் என்றும் அதனால் அரசாங்கத்தை கையாள்வது கடினம் ஆகிவிடும் என்றும் அவர்கள் கருதுவதாக தெரிகிறது. அதாவது அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் ஏதோ ஒரு மாற்றத்தைக் காட்டுமாக இருந்தால் ஐரோப்பிய ஒன்றியம் அதை ஏற்றுக் கொண்டு ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை வழங்கக்கூடிய நிலைமைகளே அதிகமாகத் தெரிகின்றன.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் அரசாங்கம் ஐநா அமெரிக்கா இந்தியா போன்ற தரப்புக்களுடன் குறிப்பிடத்தக்க அளவுக்கு சுதாரிக்க முற்படுவது தெரிகிறது. இது இம்மாத இறுதியில் தொடங்கவிருக்கும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும். இந்த ஜெனிவா கூட்டத்தொடர் ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் குறைந்தது என்றும் செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் கூட்டத்தொடரே முக்கியத்துவம் உடையது என்றும் கூறப்படுகிறது. எதுவாயினும் அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத் தொடர்களை நோக்கி திட்டமிட்டு உழைத்து வருகிறது. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான திட்டமிட்ட உழைப்பு இருப்பதாக தெரியவில்லை.

ஜெனிவா கூட்டத்தொடரை எதிர்கொள்வது தொடர்பில் கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்த் தரப்பிடம் ஒன்றிணைந்த நடவடிக்கை எதுவும் கிடையாது. ஒருபக்கம் புலம் பெயர்ந்த தமிழ்த் தரப்பு. ஒப்பீட்டளவில் ஜெனிவாவை நோக்கி அதிகமுழைப்பது புலம்பெயர்ந்த அமைப்புக்கள் தான். அங்கேயும் ஒற்றுமை இல்லை. ஆளுக்காள் தங்களை தமிழ் மக்களின் அம்பாசிடர்கள் என்று கூறிக்கொண்டு ஐநாவுக்கு வருகிறார்கள். இன்னொரு புறம் தாயகத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட மூன்று கட்சிகளும் ஒன்றிணையும் சாத்தியம் குறைந்து வருகிறது.

கடந்த ஜனவரி மாத ஜெனிவா கூட்டத் தொடர முன்னிட்டு தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டால் ஒருங்கிணைப்பு முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டு வெற்றிகரமாக ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அது ஓர் அரிதான புறநடை.அப்படி ஒரு அதிசயம் இனி நடக்குமா என்பது சந்தேகம்தான். ஏனெனில் இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கோரிக்கை அனுப்பிய விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் கூர்மையான விதத்தில் இரண்டுபட்டு நிற்கின்றன. எனவே இனிவரும் காலங்களில் ஜெனிவாவை நோக்கி இந்தக் கட்சிகளை ஒருங்கிணைப்பதில் முன்னரை விட அதிகரித்த சவால்களுக்கு இடமுண்டு.

கடந்த ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன் ஒரு கூட்டுக் கடிதத்தை தயாரித்த பொழுது அதில் இணைந்து செயற்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது அந்த கோரிக்கையின் வடிவத்தை மாற்றியமைத்தது.அதன்படி பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்று அக்கட்சி வற்புறுத்தியது. பலத்த வாதப்பிரதிவாதங்களின் மத்தியில் ஏனைய கட்சிகளும் அதற்கு ஒப்புக் கொண்டன. ஆனால் கிட்டத்தட்ட ஓராண்டு கழிந்து விட்டது. ஜெனிவாவுக்கு வெளியே பொறுப்புக்கூறலை கொண்டுபோகும் விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ அல்லது ஏனைய கட்சிகளோ இதுவரை எந்த ளவு தூரம் முன்னேறியிருக்கின்றன? குறிப்பாக பொறுப்புக் கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே எடுத்து அனைத்துலக நீதி மன்றங்களை நோக்கிப் போக வேண்டும் என்று வற்புறுத்திய தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த பன்னிரண்டு மாதங்களிலும் இது தொடர்பில் எதுவரை முன்னேறியுள்ளது? என்ற கேள்விக்கு விடை கூற வேண்டும்.

கடந்த 12 ஆண்டுகளில் தமிழ் கட்சிகள் ஒப்பீட்டளவில் ஒன்றுபட்டு ஒரு கோரிக்கையை முன்வைத்தது அந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான். ஆனால் அந்தக் கோரிக்கையை முன்வைத்த பின் அதற்காக யாருமே அர்ப்பணிப்போடு உழைத்திருக்கவில்லை என்பதைத் தான் கடந்த ஓராண்டு காலம் நிரூபித்திருக்கிறது.

இது எதைக் காட்டுகிறது? ஒரு அரசுடைய தரப்பு தன்னிடம் உள்ள நிறுவனங்களின் மூலமும் அரசுகளுக்கும் அரசுகளுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவுகளின் மூலமும் ஜெனிவாவை எதிர்கொள்வதற்காக திட்டமிட்டு உழைத்துக் கொண்டிருக்க ஓர் அரசற்ற தரப்பு, ஐக்கியம் இன்றியும் தனது கோரிக்கைகளுக்காக உழைக்க தேவையான கட்டமைப்புக்கள் எவையும் இன்றியும் பெருமளவுக்கு வெறுவாய் சப்பிக் கொண்டும் ஆளுக்காள் கடிதங்களை எழுதிக் கொண்டும், தனக்குள் மோதிக் கொண்டும் இருக்கிறதா? – **நிலாந்தன்**



## தமிழ்த்தேசிய முன்னணியிடம் பகிரங்கக்

(9ம் பக்கத் தொடர்ச்சி) மன்றத்தில் சாத்தியப்படாதெனத் தெரிந்தாலும் கூட அவ்வாறு பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்து உலகத்துக்கு இலங்கை ஒற்றையாட்சி அரசின் முகத்தைப் பகிரங்கப்படுத்தலாம். அத்துடன் பிரேரணை சமர்ப்பிக்கப் படவுள்ளதைக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிந்து பிரேரணையைச் சமர்ப்பிக்க வேண்டாம் நிறுத்துங்கள் இந்திய அரசு இரு மாகாணங்களையும் மீண்டும் இணைத்துத் தரும் என்று தொலைபேசியில் உறுதியளிக்கின்றதா இல்லையா என்பதைப் பரீட்சித்தும் பார்க்கலாமல்லவா?

இந்தியாவின் இரட்டை நிலைப்பட்டையும் அம்பலப்படுத்தலாம் அல்லவா? டில்லி மாத்திரமல்ல அமெரிக்க பிரித்தானிய அரசுகளும் 13இற்குப் பின்னால் நிற்கின்ற தென்பதை அம்பலப்படுத்தவும் வசதியாக இருக்குமல்லவா? ஆகவே இந்தியத் தூதரகம் தொலைபேசியில் உறுதியளித்ததால் மீனவர் குறித்த சபை ஒத்தி வைப்பு வேளைப் பிரேரணையை நிறுத்தியதாக அறிக்கை வெளியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு இக்கட்டுரை சமர்ப்பணம்.

விடுதலை அரசியலும் போரின் பக்க விளைவுகளுக்குரிய தீர்வுகளையும் மற்றும் அபிவிருத்தி அரசியலையும் சமாந்தரமாக முன்னெடுத்துத் தேச அரசியலைக் கட்டியெழுப்ப வேண்டுமே தவிர சாதாரண கட்சி அரசியலுடன் கூடிய சலசலப்புப் பேச்சுக்கள் பரபரப்புப் பிரகடனங்கள் வெற்று அறிக்கைகள் முன்னணியிடம் இருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட ஒன்றல்ல.

## ஈழத்தமிழ் நோக்கி நிலையில்

(15ம் பக்கத் தொடர்சி) ஓர் அரசற்ற இனத்தைப் பொறுத்தவரை அல்லது சிறிய தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை பக்கத்துப் பேரரசுதான் இறுதியிலும் இறுதியாக தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதனை உலகின் நவீன வரலாறு உணர்த்துகிறது. இப்பொழுது கொதிநிலையில் இருக்கும் உக்ரேன் விவகாரத்திலும் இது தான் நடக்கிறது. ரஷ்யா கிரிமியாவை ஆக்கிரமித்தது இந்த அடிப்படையில்தான். தீபெத்தில்,பலுசிஸ்தானில், காஷ்மீரில் போராடும் மக்களுக்கு மீட்சி கிடைக்காமல் இருப்பதும் அந்த அடிப்படையில் தான். பங்களாதேஷ் தனிநாடு ஆகியதும் அந்த அடிப்படையில் தான். பின்லாந்து மிக நுட்பமான ஒரு வெளியுறவுக் கொள்கையை வடிவமைக்க வேண்டி வந்ததும் அந்த அடிப்படையில் தான். கிழக்குத் திமோரில் பொதுமக்கள் வாக்கெடுப்பின் முடிவுகளை இறுதியிலும் இறுதியாக நடைமுறைப்படுத்தியது பக்கத்தில் இருக்கும் பலமான அரசாகிய ஒஸ்ரேலியா தான். எனவே சிறிய தேசிய இனங்களின் போராட்டங்களைப் பொறுத்த வரை இறுதி முடிவை தீர்மானிப்பது அருகிலுள்ள பெரிய அரசுகள்தான் என்பதே உலகளாவிய அனுபவம் ஆகும்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் பிராந்திய அரசியலை கெட்டித்தனமாக அணுக வேண்டும். இந்தியாவின் நலன்களுக்கும் ஈழத் தமிழ் நலன்களுக்கும் இடையிலான பொதுப்புள்ளிகளைக் கண்டு பிடித்து பேரம் பேச வேண்டும்.

**(5ம் பக்கத் தொடர்ச்சி)** வெளித்தரப்புக்களை கையாள வேண்டுமாயின், அவர்கள் வலியுறுத்தும் விடயங்களின் ஊடாகவே அவர்களை அணுக முடியும். இந்தியாவிடம் செல்லும் போது எவ்வாறு செல்ல வேண்டும் அமெரிக்காவிடம் செல்லும் போது, எவ்வாறு செல்ல வேண்டும் என்னும் அரசியல் புரிதல் தமிழ் தரப்புக்களிடம் இருக்க வேண்டும். ஆனால் தமிழ் சூ ழலில் இடம்பெறும் குழாயடி சண்டைகளை உற்று நோக்கினால் அவ்வாறான அரசியல் புரிதல் பலரிடம் இருப்பதாக தெரியவில்லை. உணர்ச்சிகரமான பேச்சுக்களை விடுத்து, தமிழ் தலைமைகள் என்போர் சூழ்நிலைக்கேற்றவாறான தந்திரோபாயங்கள் தொடர்பில் மட்டுமே சிந்திக்க வேண்டும்.

## சீனாவை ஈழத்தமிழர்கள் எவ்வாறு....

(16ம் பக்கத் தொடர்ச்சி) ஒரு எல்லைக்குள் முடக்கும் அமெரிக்க மூலோபாயத்தின் பல்முக தந்திரோபாயங்களாகும். இவ்வாறானதொரு காலகட்டத்தில் ஈழத் தமிழர்கள் சீனாவுடன் உறவுகளை ஏற்படுத்தலாமா? அது பலனளிக்குமா? உண்மையில் ஈழத் தமிழர் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இது தொடர்பில் சிந்திக்கும் ஈழத்தமிழர் புத்திஜீவிகளும் சீனாவை ஒரு எல்லைக்குள் முடக்கும் மூலோபாயத்துடன் அணி சேர்ந்திருக்கும் நாடுகளுடன் எவ்வாறு ஊடாடுவது என்பதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். எந்தவொரு வாய்ப்பும் தானாக வராது.

## ஸ்ரீலங்காவில் மனித உரிமையும்

(3ம் பக்கத் தொடர்ச்சி) என வலியுறுத்துவதில் முக்கிய பங்களிப்பை வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார். 11ம்திகதி இடம்பெற்ற இந்த மெய்நிகர் சந்திப்பினை அமெரிக்க இரஜாங்க திணைக்களமும் இலங்கைக்கான புதிய தூதுவரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். கலிபோர்னியாவை தளமாக கொண்ட ஸ்ரீலங்கா பவுன்டேசனின் உதவியுடன் அமெரிக்காவில் வாழும் இலங்கையர்கள் இந்த மெய்நிகர் சந்திப்பிற்கு அழைக்கப்பட்டனர்.

## இலங்கை தொடர்பாக ஐ.நா.ஆணையாளரின் அறிக்கை இம்முறை கடுமையாக இருக்கும்?

அரசாங்கத்திற்கு ஆதரவாக விடயங்களை திரட்டும் முகமாகவே அமைச்சர்கள் அலி சப்ரி, ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் வடக்கில் நீதிச் சேவை முகாம்களை மேற் கொண்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றம் சாட்டியுள்ளார். அத்துடன் இலங்கை தொடர்பான ஐ.நா. ஆணையாளரின் அறிக்கை இம்முறை அரசாங்கத்திற்கு எதிராக கடுமையாக இருக்கும் என யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் இவ்வாறு தெரிவித்தார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஏற்கனவே கடிதம் ஒன்றை சக நாடுகளுக்கு அனுப்பியுள்ள நிலையில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஐ.நா.வுக்கு கடிதங்களை அனுப்பவுள்ளதாக கூறினார்.காணாமல் ஆக்கப்பட்டவர்களை முன்னாள் போராளிகளாக காட்டுவதற்கு பெரும் முயற்சியை அவர்கள் எடுத்து வருகின்றனர் என்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அரசு கொண்டு வரும் என சொல்லப்படும் புதிய அரசியல் சாசனத்தில் மாகாண சபைகள் முறைமைகள் இருக்காது என எதிர்பார்ப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தலைவர் சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழில் 16 பெப் 2022 இடம் பெற்ற அனைத்து தமிழ் கட்சிக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எம்மிடம் இருக்கின்ற சிலவற்றை நாம் பாதுகாக்க நினைக்கின்றோம். ஆனால் அரசு தமிழ் மக்களிடம் உள்ள எல்லாவற்றையும் பறிக்க முயற்சி செய்து வருகின்றது. வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை நிறுவி, எமது நிலத்தை இல்லாமல் செய்கிறது. இந்த நிலையில் புதிய அரசியல் அமைப்பை கொண்டு வருவதாக சொல்கின்றனர். இது வருமா, வராத என்று தெரியாது. ஆனால் அந்த புதிய சட்ட வரைப்பில், இப்போது கொடுத்துள்ள சில அதிகாரம் கூட எமக்கு கிடைக்காது. அதிலும் மாகாண சபை அதிகாரம் முறைமை இல்லாமல் போகலாம்.

இதனால் தான் 13 ஆவது திருத்தம் வேண்டும் என இந்தியாவிடம் கேட்கின்றோம். அவர்கள் தான் ஒப்பந்த பங்குதாரர்கள். ஆகவே தான் கேட்கின்றோம் என்றார்.

A C TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

டொமினிக்கன் சுற்றுலா

ஒவ்வொரு மாதங்களிலும், இரண்டாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்
2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி,
புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்
7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| | | | | |
|---|---|---|---|---|
| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
| REGULAR C$1,250 | REGULAR C$1,500 | REGULAR C$1,750 | REGULAR C$2,000 | REGULAR C$2,250 |
| 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 | 25% OFF C$ 2,000.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.
a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது
விமான சீட்டு தங்குமிட வசதி விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை
காலை உணவு மதிய உணவு இரவு உணவு மது பானம் குளிர்பானம் சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8
FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER
www.a1actour.com
facebook.com/Allcountriestour

416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57





# இந்தியாவுடனான இலங்கை நெருக்கமான உறவுக்கான அணுகுமுறைகள் 13ஐ முற்றாக நீக்குவதற்கான உத்தியா?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
பேராசிரியர் K.T. கணேசலிங்கம்



இலங்கைக்கான புதிய அரசியல் அமைப்பு வரைபு நிறைவடைந்ததாகவும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாகவும் சிங்கள ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. அதில் விசேடமாக அவ் ஊடகங்கள் 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 13ம் திருத்தச் சட்டம் மூலம் நீக்கப்பட்டு கிராம இராச்சியங்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வாக முன் வைக்கப்படும் என தெரிவித்துள்ளது. ஆனால் இச்செய்தியின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

அதற்காக அச்செய்தி முற்றிலும் தவறானது என்று குறிப்பிட முடியாது. மாறாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தினால் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமை நீக்கப்பட வேண்டும் என பல தடவை தெரிவித்துள்ளார். அதனை விட உள்ளூராட்சி மன்றங்கள் போதுமானவை எனவும் மாகாண சபையினால் பாரிய பொருளாதார இழப்பீடு உண்டு எனவும் வாதிட்டிருந்தார். அதனையே அரசாங்க அமைச்சர்களும் தென்இலங்கை ஊடகங்களும் தென் இலங்கையின் புத்திஜீவிகளும் அதிகம் கொண்டுள்ளனர். 13ஐ முற்றாக நீக்க வேண்டும் என்பதில் தற்போதைய ஆட்சியாளர்களும் கவனம் கொள்வதனை அவதானிக்க முடிகிறது. இக்கட்டுரையும் இந்தியாவை அணைத்துக் கொண்டு 13ஐ முற்றாக நீக்க வேண்டும் என தென் இலங்கை கருதுகிறது என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது 30.01.2022 அன்று யாழ்ப்பாணத்தில் 13க்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வை முடக்கி விடக்கூடாதென கூறிக் கொண்டு அதனை முற்றாக நீக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு போராட்டத்தை நிகழ்த்தியுள்ளது. அப்போராட்டத்தை அங்கீகரிப்பது போன்று தென்இலங்கை ஊடகங்கள் அன்றைய தினமே அத்தகைய செய்தியை வெளிப்படுத்தின. தென் இலங்கை புத்திஜீவிகளும் அத்தகைய செய்தியை அங்கீகரிப்பது போன்று கருத்துக்களை பொது வெளியில் பரப்பி வருகின்றன. ஏறக்குறைய யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த போராட்டம் தென் இலங்கை ஆட்சியாளர்களுக்கு இலாபகரமானதாகவே அமைந்துள்ளதை அவர்களின் தரப்புக்கள் வெளிப்படுத்தும் செய்திகளில் தெரிகிறது. அதாவது தமிழர் போராட்டம் தென் இலங்கைத் தரப்புக்கு சேவை செய்துள்ளது.

இரண்டாவது இலங்கையின் அரசியல் நியத்தில் அரசியலமைப்பென்பது De-evolution மாதிரியைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. உலகளாவிய அனுபவம் அப்படியானதல்ல. அது எல்லா நாடுகளிலும் De-evolution ஆகவே அரசியல் அமைப்புக்கள் அமைந்துள்ளன. குறிப்பாக சோல்பரி யாப்பின் கீழான 29ஆவது திருத்தம் டொனமூர் அரசிலமைப்பில் தனிச் சிங்கள மந்திரி சபை, குடியரசின் இரண்டாவது யாப்பில் 13வது திருத்தச் சட்டம் எல்லாமே De- evolution என்ற நிபந்தனைக்குள்ளே அமைந்துள்ளது. அதனால் 13ஐ அகற்றுவதன் மூலம் இலங்கைத்தீவில் இனப்பிரச்சினை ஒன்று இல்லை என்பதை சாத்தியப்படுத்தலாம். அது மட்டுமல்லாது தமிழர் ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளாத நிலையும் அதற்கான புறச் சூழல் போன்று சட்டச் சூழலையும் உருவாக்க தென்இலங்கைக்கு வாய்ப்பானதாக அமையலாம். அதனை நோக்கியே தென்இலங்கையின் ஆட்சி இயந்திரம் செயல்படுகின்றது.

மூன்றாவது 13ஐ எதிர்ப்பதென்பது ஈழத்தமிழரால் அங்கீகரித்தல் வேண்டும் என்பது தென்இலங்கைக்கு அவசியமானது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அத்தகைய போராட்டம் தென்இலங்கை ஊடகங்களாலும் புத்திஜீவிகளாலும் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளதற்கான காரணமும் அதுவாகவே உள்ளது. கிட்டுப் பூங்காவை நோக்கிய போராட்டம் கட்சியை மையப்படுத்திய போதும் கலந்து கொண்ட பொது மக்களது எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருந்த போதும் தென்இலங்கையிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் அதிகம் பேசப்படுவதற்கான காரணமும் அதுவாகவே உள்ளது.

ஆனால் புலம்பெயர்ந்தவர்கள் அதிகம் தேசியத்திற்கான போராட்டமாக கிட்டுப் பூங்கா போராட்டத்தை கருதுகின்றனர். ஆயுதப் போராட்டத்தின் போது எப்படி விடுதலைப் புலிகள் 13க்கு எதிராக நகர்ந்தார்களோ அப்படியே தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நகர்வதாக கருதுகின்றனர். ஆனால் விடுதலைப்புலிகள் 13ஐ இடைக்கால வரைபாக ஏற்றுக் கொண்டதாக புலம்பெயர்ந்த தரப்பு அடேல் பாசிங்கத்தின் நூலை ஆதாரப்படுத்தி செய்திகள் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமன்றி விடுதலைப் புலிகள் 13ஐ எதிர்க்கும் போது அவர்களிடம் தெளிவான இலக்கும் உத்திகளும் மட்டுமல்லாது அதற்கான ஆயுதப் போராட்டமும் காணப்பட்டது.

நான்காவது 13ஐ எதிர்ப்பதென்பது இந்தியாவை நோக்கிய ஈழத்தமிழரது உறவை நிராகரிப்பதாகவே தெரிகிறது. அதாவது இந்தியாவால் கொண்டு வரப்பட்ட அடிப்படை அம்சத்தை எதிர்ப்பதென்பது இந்தியாவுடனான உறவை பகைப்பதாகவே அமையும்.

புவிசார் அரசியலை விளங்கிக் கொண்ட எந்தத் தரப்பும் இந்தியாவை நிராகரித்து விட்டு எத்தகைய மாற்றத்தையும் ஈழத்தமிழர் எட்ட முடியாது என்பதை புரிந்து கொள்வார்கள். இந்தியாவின் நலன்களும் பாதுகாப்பும் ஈழத்தமிழரால் உத்தரவாதப்படுத்தப்படுவதென்பது இந்தியாவின் நலனுக்குட்பட்டதே அன்றி ஈழத்தமிழருக்கானது அல்ல. ஆனால் அத்தகைய நகர்வென்பது ஈழத்தமிழர்களின் இருப்புக்கான அணுகுமுறையே அன்றி முடிவல்ல.

இந்தியாவால் ஈழத்தமிழரது பிரச்சினை தீர்க்கப்படுமா முடியாதா என்பது கடந்தகால அனுபவத்தினால் ஏற்பட வேண்டியதே அன்றி இறுதித் தீர்மானமல்ல. அண்மைய நடவடிக்கையான திருகோணமலை எண்ணெக் குதங்களை 75 வருடத்திற்கு பின்பு இந்தியா கைப்படுத்தியுள்ளதாகவே இந்திய தரப்பு வாதிக்கின்றது. அப்படியானால் இந்தியா இலங்கை பொறுத்து எத்தகைய உபாயங்களைக் கொண்டுள்ளது என்பதும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியதாகும்.


ஐந்தாவது மறுபக்கத்தில் இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவுடன் நெருக்கமான உறவை அதிகப்படுத்தி வருகின்றதைக் காணமுடிகிறது. ஏற்கனவே நான்கு நிகழ்ச்சித் திட்டத்துடன் இலங்கையின் நிதி அமைச்சர் இந்தியாவுக்கு முன் வைத்த திட்டத்தை இந்தியா அங்கீகரித்துள்ளதைத் தொடர்ந்து இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட எட்டு அம்சக் கோரிக்கையை முன் வைத்துள்ளார். இரு நாட்டுக்குமான நெருக்கத்தை அதிகரிக்கும் விதத்தில் முதலீட்டுத் திட்டத்தை ஊக்குவிக்கும் அணுகுமுறைகளை விருத்தி செய்வதற்கான நடைமுறைகளை புது டில்லியை தளமாகக் கொண்டு இயங்கும் விவேகானந்த சர்வதேச பவுண்டேசன் உரையாடல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அதாவது அதிகமாக இந்தியாவை இலங்கையுடன் இணைத்துக் கொள்ள தற்போதைய தென் இலங்கை அரசாங்கம் முயல்கிறது. அதற்கான அடிப்படை 13ஐ இந்தியாவாலேயே கைவிடப்படும் நிலையை உருவாக்குவதேயாகும். அதற்கான களமுனைப்புகளையும் நகர்வுகளையும் சாத்தியப் படுத்திக் கொண்டு இந்தியாவுக்கான அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்வதன் மூலம் இலக்கை சாத்தியப் படுத்த முடியுமென தென் இலங்கை கருதுகிறது. இதில் இந்தியாவின் பதில் எவ்வாறனதாக அமையும் என்பது வேறு கோணத்தில் பார்க்கப்பட வேண்டும். ஆனாலும் இந்தியா இலங்கையுடன் அதிகமாக ஒத்துழைத்து தனது நலன்களை எட்டுவதில் குறியாகச் செயல்படுவது ஒன்றும் விசேடமானதல்ல. பரஸ்பரம் அரசுகள் அவ்வாறான கோணத்திலேயே அரசியலை மேற்கொள்வன. அதுவே யதார்த்தமானதாகும்.


இந்தியாவை அணுகுதல் என்பது நட்புச் சக்தியான உத்தியே அன்றி தீர்வுக்கான திட்டமல்ல. தீர்வு எதுவென்பது ஈழத் தமிழருக்கானது. அதனை இந்தியாவிடமும் உலக நாடுகளிடமும் ஒப்படைத்து விட்டு அரசியல் செய்யாது இருப்பதென்பதற்கு இந்தியா பொறுப்புடையதல்ல.

எனவே இந்தியா பொறுத்தும் சரி, உலக நாடுகள் பொறுத்தும் சரி ஈழத் தமிழருக்குரிய பலம் நட்புறவை விருத்தி செய்வதும் அதற்கான அரவணைப்பினை கையாள்வதுமேயாகும். அதனை நோக்கிய நகர்வை முன்னெடுப்பதே தமிழருக்கு அவசியமான நகர்வாகும். தென் இலங்கை அதனை சரிவர கண்டு கொண்டு நகர்கிறது. அதனால் அது இந்தியாவையும் சீனாவையும் கையாள்கிறது. மட்டுமல்ல உலகத்தையும் கையாள்கிறது. அதன் வலிமைக்குள்ளேயே 13இன் இருப்பும் முடிவும் அமைய ஈழத் தமிழர் வழியமைப்பதென்பது தீர்வுக்கான அணுகுமுறையல்ல உத்தியாக கொள்வதாகும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதையும் ஆழமாக யோசித்து செய்வது அவசியம். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாக செய்வீர்கள். தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக இல்லா விட்டாலும் நிதானமாக இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதையும் ஆலோசித்து செய்வது நன்மை தரும். மேலதிகாரிகள் கூறுவதற்கு மாற்று கருத்துக்களை கூறாமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் நிதானமாக பேசுவது அமைதியை தரும். நண்பர்கள், உறவினர்களிம் விட்டு கொடுத்து செல்வது நல்லது. குழந்தைகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அலைச்சல், வேலைப்பளு இருக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். கோபத்தை கட்டுப்படுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் வேகம் குறைந்தாலும் திருப்திகரமாக நடக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமுடன் செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களின் ஆலோசனையை கேட்டு செயல்படுவதை தவிர்ப்பது நல்லது. மேலகாரிகள் மூலம் நன்மை உண்டாகும். குடும்பாதிபதி சுக்கிரன் ஆட்சியால் குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் குறையும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பெண்களுக்கு வீண் கவலைகள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த காரியங்கள் நடக்கும். எதிலும் நல்லது கெட் டதை யோசித்து அதன் பின்பு அந்த காரியத்தில் ஈடுபடுவது நன்மை தரும்.




மிதுனராசி அன்பர்களே! எதையும் சமாளிக்கும் தைரியம் உண்டாகும். எடுத்த காரியங்களில் தாமதம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். கேதுவின் சாரத்தால் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. . குடும்ப செலவை சமாளிக்க பணவரத்து இருக்கும். மனதில் ஆன்மீக எண்ணங்கள் ஏற்படும். பெண்களுக்கு அடுத்தவர்கள் செயல்கள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம் கவனம் தேவை. நிம்மதியும், சந்தோஷமும் அதிகரிக்கும். எதையும் அவசரப்படாமல் நிதானமாக செய்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! மனம் மகிழும் படியான சம்பவங்கள் நடக்கும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். நீண்ட தூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமை யாக செயல்பட்டு உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கப்பெறுவர். சக ஊழியர்கள் மூலம் நீங்கள் எடுத்த காரியத்தை சாதித்து கொள்வீர்கள். குழந்தைகள் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய நண்பர்கள் கிடைப்பர். தந்தையின் உடல் நிலையில் கவனம் தேவை. பெண்களுக்கு தொல்லைகளும். பிரிவினையும் நீங்கி ஒற்றுமையும் உயர்வும் ஏற்படும். எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும்.




சிம்மராசி அன்பர்களே! இனிமையான பேச்சின் மூலம் சிக்கலான காரியங்களையும் எளிதாக செய்து முடிப்பீர்கள். உங்கள் திறமையை கண்டு அடுத்தவர்கள் வியப்பார்கள். கோப த்தை கட்டுப்படுத்துவது நல்லது. வேளை தவறி உணவு உண்ணாமல் பார்த்து கொள்வது நல்லது. பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதுரியமாக செயல்பட்டு முன்னேற்றம் காண்பர். உத்யோக த்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு பாராட்டு பெறுவர். கடுமையான பணியின் காரணமாக சோர்வு உண்டாகலாம். எடுத்து கொண்ட பணிகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். பெண்கள் தங்கள் செயல் களை செம்மையுற திருத்தமாக செய்வர். லாபங்கள் பெருகும். கோபத்தை குறைத்து நிதானத்தை கடைபிடிக்கவும்.




கன்னிராசி அன்பர்களே! பல வழிகளிலும் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். தொழில் வியாபாரத்தில் மெத்தன போக்கு காணப்பட்டாலும் தேவையான பண வரத்து இருக்கும். புதிய முயற்சிகளில் தாமதமான நிலை காணப்படும். நீண்ட நாட்களாக முடங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சல், காரியங்களில் இழுபறி என்ற நிலையை காண்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரவுடன் எடுத்துக் கொண்ட காரியங்கள் சுமூகமாக முடியும். தாய் தந்தையின் உடல் நிலையிலும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்களுக்கு தொல்லைகள் குறையும். கடமைகளைச் சரிவர செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும். நற்பெயர் கிட்டும். பேச்சை குறைத்து செயலில் ஈடுபடுவது நன்மையை தரும். இறை வழிபாடு இவ்வாரம் அவசியமானது.







துலாம் ராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் எதையும் சாதகமாக செய்து முடிப்பீர்கள். திறமை அதிகரிக்கும். திட்டமிட்டபடி செயலாற்றுவீர்கள். வாகனங்களில் செல்லும் போதும், பயணங்களின் போதும் எச்சரிக்கை தேவை. தொழில் வியாபாரத்தில் வர்த்தக திறமை அதிகரிக்கும். பணவரத்தும் திருப்திகரமாக இருக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையால் இழுபறியாக இருந்த வேலையை துணிச்சலாக செய்து முடிப்பர். நீண்ட நாட்களாக வராமல் இருந்து வந்த பணம் கைக்கு வந்து சேரும். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பெண்கள் துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பர்.





விருச்சிகராசி அன்பர்களே! வீண் அலைச்சல் இருந்தாலும் பணவரவு நன்றாக இருக்கும். முயற்சிகளில் வெற்றி கிடைப்பதில் இருந்து வந்த தாமதம் நீங்கும். மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமாக எதையும் செய்யும் எண்ணம் தோன்றும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான கடிதப் போக்குவரத்தால் அனுகூலம் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பயணங்களால் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகள் கூறுவதை மறுத்து பேசாமல் அனுசரித்து செல்வது நன்மையை தரும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் நீங்கும். குடும்பத்திற்கு தேவையான வசதிகளைப் பெருக்குவீர்கள். பெண்கள் எதையும் ஆக்கபூர்வமாக செய்து வெற்றி காண்பர். சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவர்.




தனுசுராசி அன்பர்களே! அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது அவசியம். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில், வியாபாரத்தில் சாதுரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும், அதற்கேற்ற பலனும் உண்டாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பணியிட மாற்றம் கிடைக்கும். குடும்பத்தினருடன் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தினரிடமும் நண்பர்களிடம் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. எதிர்பார்ப்புகளை குறைத்து இருப்பதை வைத்து முன்னேற முயற்சிப்பது நல்லது.




மகரராசி அன்பர்களே! எல்லாவிதத்திலும் நன்மை உண்டாகும். எதையும் துணிச்சலாக செய்து முடிப்பீர்கள். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். அந்நிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அதிக உழைப்பின் மூலம் லாபம் கிடைக்க பெறுவர். உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் கூடுதல் உழைப்பின் மூலம் செய்து முடிக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்த பணியிட மாற்றம் பதவி உயர்வு தங்களைத் தேடி வரும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். எதிர்பார்த்த தகவல் நல்ல தகவலாக இருக்கும். அவசரத்தை தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாக இருப்பர். பெண்களுக்கு எதிர்ப்புகள் நீங்கும். நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்னைகள் விலகும். மந்திர தந்திரங்களை நம்ப வேண்டாம்.




கும்பராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவர். சக ஊழியர்கள் மேலதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். பதவி உயர்வு பெறுவதில் இருந்து வந்த சிக்கல்கள் தீரும். குடும்பத்தில் இருந்த கருத்து வேற்றுமைகள் அகலும். வாழ்க்கை துணையின் ஆதரவு இருக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். பெண்களுக்கு அடுத்தவர் கூறுவதை செய்யும் முன்பு அது பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தேவையான உதவிகள் கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! வீண் அலைச்சல் குறையும். சுணங்கிக் கிடந்த காரியங்கள் வேகம் பெறும். சமூகத்தில் அந்தஸ்து உண்டாகும். தொழில் வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். சிலர் புதிய தொழில் தொடங்க முற்படுவர்.உத்யோகஸ்தர்கள் குறிக்கோளை அடைவது லட்சியமாக கொண்டு செயல்படுவர். புதிய தொடர்புகள் மூலம் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்து வந்த வாக்குவாதங்கள் அகலும். வேலை நிமித்தமாக குடும்பத்தை விட்டு வெளியே தங்க நேரிடலாம். சுபச்செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு எண்ணிய காரியம் கை கூடும். வீண் அலைச்சல் குறையும். வீண்வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் குறையும். ஐயப்பன் ஆலயத்தில் ஆஞ்சநேயரை வழிபடவும்.



## 13வது ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி சீனித்தம்பி செல்வம்

**அன்புவெளிபுரம் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது 12வது ஆண்டு நினைவுநாள் 18 பெப்ரவரி 2022 வெள்ளிக் கிழமை ஷயாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சீனித்தம்பி செல்வம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.**

# 31ம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



புங்குடுதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வதிவிடமாகவும்
வவுனியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

## அமரர் உயர்திரு
## நாகேந்திரன் லட்சுமணன்

அன்னை மடியில் 24 யூலை 1936

ஆண்டவன் திருவடியில் 21 ஜனவரி 2022

அன்பின் திருவுருவே! பாசத்தின் சிகரமே!
பார் போற்ற எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
ஏணிப் படியாய் நின்று எங்கள்
வாழ்வில் ஏற்றம் பெற வைத்தீர்கள்!
பால்ய வயது ஞாபகங்கள் — எங்கள்
நெஞ்சில் பசுமையாய் நிறைந்துள்ளன
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
நிதானமான பேச்சு நீதியான செயற்பாடு
நேர்மையாக கொடுக்கல் வாங்கல்
மக்களின் தேவை அறிந்து சேவை புரிந்தீர்கள்
அதை உன்னதமான பாடமாய் எமக்குப் போதித்தீர்கள்
அப்பா! உங்கள் ஆத்மா சாந்தி பெற
எல்லாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

வையத்துள் வாழ்வாழ்ங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒருவராகி விட்ட எங்கள் குடும்பத்தலைவர் அமரர் நாகேந்திரன் லட்சுமணன் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு எங்கள் இல்லங்களுக்கு வருகை தந்து எங்கள் துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும்

பொதுமக்கள் அஞ்சலிக்காக அன்னாரது பூதவுடல் வைக்கப்பட்ட போது நேரில் வருகை தந்து இறுதி அஞ்சலி செலுத்தியோருக்கும் தகனக்கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும்

உலகின் பல்வேறு தேசங்களில் இருந்தும் தொலைபேசி மூலமும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்

மலர் மாலைகள் அணிவித்தும் மலர் வளையங்கள் வைத்தும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும்

தேவார திருமுறைப்பாடல்களை ஓதியோருக்கும் இறுதஜக் கிரியைகளை சிறப்புற செய்த அந்தணப் பெரு மக்களுக்கும்

20 பெப்ரவரி 2022 செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளவுள்ள உற்றார், உறவினர் நண்பர்களுக்கும்

தினமும் எமது இல்லங்களுக்கு உணவு மற்றும் ஆகாரங்களை கொண்டு வந்து உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எங்களுக்கு இன்னும் பல்வேறு வகையிலும் உடனிருந்து உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தினரின் நெஞ்சார்ந்த நன்றியறிதலை தாழ்மையுடன் தெரிவித்து கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


காப்புறுதிச் சேவையில் 20 ஆண்டுகள்
ஆதரவு தந்த அனைவருக்கும்
நெஞ்சார்ந்த நன்றி
DISABILITY INSURANCE
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
RRSP & RESP
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
647 401 5800 / 416 439 2800
218 EXPORT BLVD, MISSISSAUGA, SUITE 209-211, L5S 0A7